
இலக்கு
GLOBAL TAMIL MEDIA CENTER
வாராந்த மின்னிதழ்
ilakku.org
SUBSCRIBE US! youtube.com/c/IlakkuWeb
LIKE US! facebook.com/ilakku.ilakku.10
FOLLOW US! twitter.com/Ilakku1

இதழ் 281 | சனி, ஏப்ரல் 06, 2024 | 11 பக்கங்கள்



செல்வின் மரியாம்பிள்ளை
செவ்வி



# கச்சதீவை மோடி கையில் எடுத்தது ரணிலுக்கு அழுத்தம் கொடுக்கவா?



## இஸ்லாமிய கடும்போக்கு செயற்பாடுகளை இலங்கை புலனாய்வுத்துறையே திட்டமிடுகின்றது

மட்டு.நகரான்

## நெத்தன்யாகுவுக்கு எதிராக இஸ்ரேலில் அதிகரித்துவரும் ஆர்ப்பாட்டங்கள்



தமிழில்: ஜெயந்திரன்


© 2024 இலக்கு இணையம்

## மக்கள் வளங்களை இந்தியாவுக்கு தாரை வார்க்க வேண்டாம் - திருகோணமலையில் போராட்டம்



திருகோணமலை நகரில் உள்ள மணிக்கூட்டு கோபுர சந்தியில் மக்கள் போராட்ட இயக்கத்தினர் உணவு தவிர்ப்பு போராட்டத்தை கடந்த செவ்வாய்க்கிழமை (02) காலை 11 மணியளவில் ஆரம்பித் திருந்தனர்.

இந்த உணவு தவிர்ப்பு போராட்டத்தில் பிரதேசத்தை சேர்ந்த பலர் கலந்து கொண்டனர்.

திருகோணமலை மாவட்டத் தில் இடம்பெற உள்ள அந்நிய சக்திகளின் தலையீடு மற்றும் திருகோணமலை நகரில் உள்ள சில பிரதேசங்கள் வேறு நாடுகளுக்கு குறிப்பாக இந்தியாவுக்கு விற்பனை செய்வதை எதிர்க்கும் முகமாக பிரதானமாக உணவு தவிர்ப்பு போராட்டம் இடம்பெற்றது.

மேலும் பொதுமக்களுக்கு இவ் உணவு தவிர்ப்பு போராட் டத்தை விளக்கப்படுத்தும் நோக்க மாகவும் நகரில் உள்ள பிரதேசங்கள் வேறு நாடுகளுக்கு விற்பனை செய்வதை தவிர்க்க அல்லது தடுக்கும் முகமாக அது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்தை கொண்டு துண்டு பிரசுரம் விநியோகிக்கப்பட்டது.

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

## உலக நாடக நாளில் "மஹாகவி காளிதாசர்"



உலக நாடக தினத்தினை முன்னிட்டு மார்ச் 27ஆம், 28ஆம் திகதிகளில் "மஹாகவி காளிதாசர்" எனும் நாடகம் மேடை யேறியது.

நாடக தினத்தினை முன் னிட்டு பல்கலைக்கழகங்களும் நாடகக் கம்பனிகளும் பல நாட கங்களை மேடையேற்றிய தோடு அதையொட்டிய பல நிகழ்வு களையும் நிகழ்த்தியுள்ளன.

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

## கச்சதீவு பிரச்சனை எப்பவோ முடிந்த விவகாரம்– இலங்கை



கச்சதீவு விவகாரம் 50 வரு டங்களுக்கு முன்னர் தீர்க்கப் பட்டுவிட்டது அதனை மீண்டும் கையில் எடுக்கத்தேவையில்லை என இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள் ளார்.

இந்தியாவில் எதிர்வரும் 19 ஆம் நாள் நாடாளுமன்றத்தேர்தல் ஆரம்பமாகவுள்ள நிலையில் தமிழக அரசு மீண்டும் கச்சதீவுப் பிரச்சனையை கையில் எடுத்துள் ளது.

இலங்கையின் தமிழ் மக் களின் வடக்கு கிழக்கு பிரதேசங் களில் உள்ள வடபகுதி கடலில் மீன்பிடிப்பதை அதிகரிக்கும் நோக் கத்துடன் தமிழக அரசு இந்த விவகாரத்தைகையில் எடுத்துள்ளது. இலங்கையை மிரட்டி வடக்கு கடலை கைப்பற்றுவதன் மூலம் தமது பொருளாதாரத்தை அபி விருத்தி செய்ய தமிழக அரசு திட்ட மிட்டுவருகின்றது.

ஆனால் தமிழகத்தின் தற் போதைய திராவிட முன்னேற்றக் கழக அரசும் இந்தியா காங்கிரஸ் அரசும் இணைந்தே 285 ஏக்கர் பரப்பளவுள்ள இந்தியாவின் கரையில் இருந்து 21 தமைல்கள் தொலைவில் உள்ள கச்சதீவை

தொடர்ச்சி 09ஆம் பக்கம்

## இஸ்ரேலின் தாக்குதலாலல் காசா சந்தித்த சேதம் 18 பில்லியன் டொலர்கள் – ஐ.நா

கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் முதல் காசா பகுதி மீது இஸ்ரேல் மேற்கொண்டுவரும் தாக்குதலினால் ஏற்பட்ட சேதங் கள் 18.5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் என ஐக்கிய நாடுகள் சபைமற்றும்உலகவங்கிஆகியவை கூட்டாக வெளியிட்டுள்ள அறிக் கையில் தெரிவித்துள்ளன.

அங்கு ஏற்பட்டடுள்ள சேதம் காசாவின் மொத்த உற்பத்தியில் 97 விகிதமாகும். அந்த பிரதேசத்தில் உள்ள மக்கள் குடியிருப்புக்களில் 72 சதவிகிதமானவை அழிவடைந் துள்ளன. அதன் பெறுமதி 13.2 பில்லியன் டொலர்களாகும். 9 விகிதமான வர்த்தகத்துறை பாதிப் படைந்துள்ளது. அதன் இழப்பு 1.6 பில்லியன் டொலர்களாகும்.

விவாசாயத்துறை 628 மில்லி யன் டொலர்கள் இழப்பையும், கல்வித்துறை 100 மிலல்லியன் டொலர்கள் இழப்பையும், நீர் விநியோகம் 502 மில்லியன் டொலர்கள் இழப்பையும், மருத்து வத்துறை553 மில்லியன்டொலர்கள் இழப்பையும் சந்தித்துள்ளன.



இதனிடையே பாலஸ் தீனத்தை நாடாக அங்கீகரித்து அதனுடன் இராஜதந்திர உறவு களை ஆரம்பிக்கப்போவதாக

தொடர்ச்சி 09ஆம் பக்கம்

## பிரான்ஸ் மோசமான விளைவுகளை சந்திக்கும்–ரஸ்யா எச்சரிக்கை



உக்ரைனுக்கு படைய அனுப் புவது என்ற திட்டமானது பிரான்ஸ் மோசாமான விளைவு களைச் சந்திக்கவே வழிவகுக்கும் என ரஸ்யாவின் பாதுகாப்பு அமைச் சர் சேர்ஜி சொய்கு எச்சரித்துள்ளார்.

பிரான்ஸின் பாதுகாப்பு அமைச்சர் செபஸ்ரி யன் லிகோனு வுடன் கடந்த புதன்கிழமை(3) மேற்கொண்ட தொலைபேசி உரை

தொடர்ச்சி 09ஆம் பக்கம்

## சீனாவை அதிகம் விரும்பும் தென்கிழக்கு ஆசிய மக்கள்

தென்கிழக்கு ஆசிய நாடு களில் உள்ள மக்களின் பெரும்பான்மையானவர்கள் அமெரிக்காவை விட சீனாவையே அதிகம் விரும்புவதாக அண்மை யில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் தெரியவந்துள்ளது.

சிங்கப்பூரைத் தளமாகக் கொண்ட ISEAS-Yusof Ishak Institute என்ற நிறுவனம் இந்த ஆய்வை வருடம்தோறும் மேற்கொண்டு வருகின்றது. 50.5 விகிதமான மக் கள் சீனாவை விரும்புவதாகவும் இது கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது 11 விகிதம் அதிகம் எனவும் அது தனது 2024 ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதுவே இந்த பிராந்தியத் தில் அமெரிக்கா சந்தித்த முதல் தோல்வியாகும். அதாவது தென் கிழக்கு ஆசிய பிராந்தியத்தில் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்து வருவதையே இது காட்டுகின்றது. கடந்த வருட ஆய்வில் 61.1 விகித மக்கள் அமெரிக்காவுக்கும் 38.9

தொடர்ச்சி 09ஆம் பக்கம்

## இந்தியாவில் தகவல் மையம் அமைக்க மெற்றா நிறுவனம் திட்டம்

முகநூல், இன்ஸ்ரோகிராம் மற்றும் வற்ஸ்அப் ஆகிய சமூகவலைத்தளங்களை இயக்கும் மெற்றா என்ற மிகப்பெரும் அமெரிக்க தொழில்நுட்ப நிறு வனம் இந்தியாவில் முதல் முத லாக தகவல் மையம் ஒன்றை அமைக்கவுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

ஆசியாவின் மிகப்பெரும் செல்வந்தரான இந்தியாவை சேர்ந்த முகேஸ் அம்பானியின் சென்



னையில் உள்ள றியலைன்ஸ் நிறு வனத்தில் இந்த மையம் அமைக் கப்படவுள்ளது. இந்த மையத் தில் செயற்கை நுண்ணறிவு

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

# தமிழர்களின் பாரம்பரியத்திலும் மீறப்படும் உரிமை

## திருமலையான்

திருகோணமலையில் மூவினங்களை சேர்ந்த சமூகமும் வாழ்ந்து வருகிறார்கள் ஆனாலும் அது அவ்வாறு இருந்தாலும் இனவாதங்களை தூண்டும் சக்திகளால் இனவாதத்தை விதைத்து மக்களை குழப்ப நினைக்கின்றனர். திருகோணமலையில் 28.03.2024 அன்று பௌத்த துறவிகள் பலர் இணைந்து தொல்பொருள் திணைக்கள இடங்களில் சிவலிங்கம் வைக்கக் கூடாது என கவனயீர்ப்பினை திருகோணமலை நகரில் முன்னெடுத்துள்ளனர். இவ்வாறு தமிழர்களின் கலாசார மத விடயங்களிலும் சுதந்திரம் பறிக்கப்படுகிறது என்பது இதன் மூலமாக புலனாகிறது.



திருகோணமலையில் 1008 சிவலிங்கம் வைப்பதை தடுக்கவும் பெரும்பான்மை சமூகத்துக்கு காணி உறுதிப்பத்திரங்களை வழங்காமல் இருப்பதற்கு எதிர்புத் தெரிவித்தும் இந்த கவனயீர்ப்பினை முன்னெடுத்தனர். இதில் பொது மக்களும் இணைந்து பௌத்த துறவிகளும் உடனிருந்து இதனை முன்னெடுத்தனர்.

திருகோணமலை கோகன்னபுர காக்கும் அமைப்பினரால் இது முன்னெடுக்கப்பட்டது.

இதன் போது பிக்கு ஒருவர் இவ்வாறு தெரிவித்தார். திருமலை மாவட்டத்தில் தமிழ் முஸ்லிம் சிங்கள மக்களுக்காக குரல் கொடுக்கிறோம் துறைமுக அபிவிருத்தி என்ற பேரில் 4445 குடும்பங்களை விரட்டியடிக்க திட்டத்தை முன்னெடுக்கின்றார்கள். கடந்த காலங்களில் கரடிபுவல் மக்களுக்கு எதிராக

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

# தமிழகத்தில் தடுத்துவைக்கப்பட்ட ஈழத்தமிழர்கள் இலங்கை திரும்பினர்



இந்தியாவில் தமிழகத்தில் உள்ள தடுப்பு முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருந்த முருகன், ஜெயக்குமார் மற்றும் ரொபர்ட் பயஸ் உள்ளிட்ட மூவரும் கடந்த புதன்கிழமை(3) இலங்கை திரும்பியுள்ளனர்.

அவர்கள் மூவரும் திருச்சி முகாமிலிருந்து பொலிஸ் பாதுகாப்புடன் சென்னைக்கு அழைத்து வரப்பட்ட நிலையில், புதன்கிழமை காலை 10 மணிக்கு கொழும்பு வரும் விமானம் மூலம் மூவரையும் பொலிஸார் அனுப்பி வைத்தனர்.

30 ஆண்டுகளுக்கு மேல் சிறைத் தண்டனை அனுபவித்த நிலையில் உச்ச நீதிமன்ற உத்தரவின் பேரில் விடுவிக்கப்பட்டு திருச்சி சிறப்பு முகாமில் சாந்தன், முருகன், ஜெயக்குமார் மற்றும் ரொபர்ட் பயஸ்

தொடர்ச்சி 09ஆம் பக்கம்

# ஈழத்தமிழரின் இறைமையை மறுக்கும் அநுரகுமர திசநாயக்காவின் நுட்பமான உரை

சிறிலங்காவின் ஜனாதிபதியாக வரக்கூடிய வேட்பாளர் என்கிற கருத்தை கருத்துக் கணிப்புக்களும் அமெரிக்கா இந்தியா கனடா நாடுகளின் உரையாடல்களுக்கான உத்தியோகபூர்வ அழைப்புக்களும் யப்பான் மற்றும் தென்கிழக்காசிய மத்திய கிழக்குத் தூதுவர்களின் சந்திப்புக்களும் ஏற்படுத்தியுள்ள பலங்களின் பின்னணியில் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசநாயக்கா சமகாலத்தின் முக்கிய சிங்களத் தலைமையாகத் தமிழர் தாயகப் பகுதிகளிலும் தனது தேர்தலுக்கான ஆதரவு தேடும் உரைகளை நிகழ்த்தி வருகின்றார். இந்தத் தொடரில் இலங்கையின் ஆசிரிய சேவை சங்கத்தினர் தங்கள் வருடாந்த மாநாட்டை தங்களது வடமாகாண கிளையுடன் இணைந்து யாழ்ப்பாணத்தில் நடத்தி அதற்குப் பிரதம விருந்தினராக அநுரகுமாராவை உரையாற்ற அழைத்திருந்தனர். அவர் அங்கு ஆற்றிய நுட்பமான உரை ஈழத்தமிழரின் இறைமையை மறுக்கும் சிங்கள பௌத்த பேரினவாதத்தின் பிரதிநிதியாகவே அவரும் உள்ளார் என்பதைத் தெளிவாக்கியுள்ளது. அவர் தனது உரையில் மிக நுட்பமான முறையில் கூறிய சிலவிடயங்களை எடுத்து நோக்குவோம்.

"நாங்கள் வாக்குக் கேட்கவோ 13 பிளஸ் தருவோம் - சமஸ்டி தருவோம் எங்களுக்கு வாக்களியுங்கள் என்று கொடுக்கல் வாங்கல் வியாபாரம் செய்யவோ உங்களிடம் வரவில்லை. வடக்கு கிழக்கு தெற்கு என்ற பேதங்கள் இல்லாமல் சிங்களவர் தமிழர் முஸ்லீம்கள் மலையகமக்கள் மலேயர்கள் பறங்கியர் என்ற பிரிவினைகள் இல்லாத இந்து இஸ்லாம் கத்தோலிக்க பௌத்த வேறுபாடுகள் இல்லாமல் நாங்கள் கூட்டு முயற்சியால் அனைவரும் ஒன்றிணைய வேண்டும். ஆட்சியை மாற்ற வேண்டும் என அழைப்பதற்காகவே தான் வந்துள்ளதாக முதலில் கூறினார். ஆனால் இந்த வேறுபாடுகளை ஊக்குவிக்கும் முறையில் அரசியலமைப்பும் சிங்கள பௌத்த தலைமைகளும் உள்ளன என்றோ அதனை மாற்ற என்ன செய்யலாம் என்றோ அவர் வாயே திறக்கவில்லை.

அத்துடன் ஜனாதிபதி தேர்தல் அனைவரது தலைவிதியை நிர்ணயிக்கும் தன்மையானது என்பதால் அதனைப் புறக்கணியாது கவனமான முறையில் கலந்து கொள்ள வேண்டும் எனவும் விளக்கமளித்தார். ஆனால் ஜனாதிபதி தேர்தல் முறைமை சிங்கள பௌத்த ஜனாதிபதி ஒருவரையே தெரிவு செய்யக்கூடிய முறையில் அரசியலமைப்பில் கட்டமைக்கப்பட்டு உள்ளது. இதனை மாற்றுவது குறித்து எந்தப் பேச்சும் அவர் பேசவில்லை.

தேசிய ஒருமைப்பாட்டின் மூலமே நாட்டின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். வடக்கின் ஆதரவு இன்றி தெற்கு முன்னேற முடியாது. தெற்கின் ஆதரவு இன்றி வடக்கு முன்னேற முடியாது. தெற்கு சிங்களவாதம் வடக்கு தமிழ்வாதம் கிழக்கு இஸ்லாமியவாதம் இல்லாத அரசியல் உருவாக்கப்பட வேண்டும். அவர்களே எங்களைப் பிரித்தார்கள். நாங்கள் யுத்தங்களைக் கண்டு வாழும் பரம்பரையாக உள்ளோம். நாளைய எமது குழந்தைகளும் யுத்தத்தைக் கண்டு வாழும் பரம்பரையாகத்தான் வாழ நாம் அனுமதிக்க வேண்டுமா? உண்மையில் அப்படிப் பிரிவினைகள் சிங்களவர்கள் தமிழர்கள் முஸ்லீம்களிடை இல்லை அவர்கள் பிரித்தார்கள். நாங்கள் இணைந்து நாட்டை முன்னேற்றுவோம் என்றார். ஆனால் சிங்கள பௌத்த பேரினவாத அரசியலமைப்பும் அதன் அடிப்படையில் ஈழத்தமிழர்களை இனஅழிப்பு இனத்துடைப்பு பண்பாட்டு இனஅழிப்பின் மூலம் படைபல பயன்பாட்டால் அவர்களின் வரலாற்றுத் தாயகத்தில் இருந்து வெளியேற வைப்பதும் எந்த வகையில் இன்று இவர்களால் மாற்றியமைக்கப்படவுள்ளது என்பது குறித்த எதுவுமே அவரின் பேச்சில் இடம்பெறவில்லை. தமிழர் தாயக மறுப்பாக வடக்கு கிழக்கு என்ற ராசபக்ச ரணில் சொல்லாட்சியையே அவர் உரை முழுவதும் கையாண்டார்.

மொழியுரிமை மதஉரிமைகள் உடன் இனங்களது கலாச்சாரத் தனித்துவங்கள் தங்களால் உறுதிசெய்யப்படும் என அடித்துக் கூறினார். ஆனால் மக்களுடைய உரிமை இழப்புக்கு மக்களின் தாயக தேசிய தன்னாட்சி உரிமைகள் மறுக்கப்படுவதே காரணம் என்பதை அவர் மறந்தும் கூறாது கவனமாக உரையாற்றினார். இனங்களின் கலாச்சார தனித்துவம் பற்றிப் பேசும் அவர் ஈழத்தமிழரின் தனித்துவம் அவர்கள் இலங்கைத் தீவில் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல் வாழ்ந்து வருவதால் தொன்மையும் தொடர்ச்சியுமான அவர்களின் இறைமையின் அடிப்படையிலான தாயக தேசிய தன்னாட்சி உரிமைகள் உள்ள வாழ்வியல் என்பதை அவர் கூறவில்லை.

எல்லா மக்களுக்குமான அமைதியும் பாதுகாப்பும் வளர்ச்சியும் சிங்களப் படைகள் இல்லங்கள் தோறும் வீட்டுக்கு முன்னால் நிலையெடுத்து நின்று மக்களின் பாதுகாப்பையும் அமைதியையும் வளர்ச்சிகளையும் அடக்கி ஒடுக்கி இராணுவ சர்வாதிகாரத்தை சனநாயக ஆட்சி என்ற பெயரில் வழங்கிக் கொண்டிருக்கையில் எவ்வாறு நடைமுறைச் சாத்திமாகும். படைகள் திருப்பிப் பெறப்படாது 20 படையணிகளில் 18 வடக்கு கிழக்கில் நிலைகொண்டுள்ளமை குறித்து ஒரு சொல் கூட கவலை கூட தெரிவிக்காத நிலையில் எப்படி தமிழர்கள் முஸ்லீம்கள் மலையக மக்களின் நாளாந்த வாழ்வுக்குள்ள இனங்காணக் கூடிய அச்சத்தை இவர்கள் நீக்குவார்கள் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

யுத்தத்தின் கொடூரமான விளைவுகள் ஏற்படுத்தியுள்ள வெளிவிளைவுகள் குறித்து நெஞ்சுருகப் பேசும் அவர் அதற்கான காரணங்களையோ அல்லது அதனை இனிமேலாவது மாற்ற வேண்டும் என்ற நோக்கையோ அவர் வெளிப்படுத்தவில்லை.

வெடுக்குநாறி ஆதிசிவன் விடயத்தில் அதனை ஈழத்தமிழர்களின் மனித உரிமையை மீறிய சிறிலங்காவின் செயலாக அல்லாமல் ஒரு பௌத்த தொல்பொருள் சின்னம் கண்டு பிடிக்கப்பட்டால் அது வரலாற்றைப் பேணும் செயல். அதற்கு எதற்கு எதிர்ப்புகள் காட்ட வேண்டுமென்று கேள்வி எழுப்பி ஈழத்தமிழர் வழிபாட்டுச் சுதந்திர மறுப்பும் நில இழப்பும் குறித்து எதுவித கவலையும் கூடத் தெரிவிக்காது வெறுமனே பொலிசார் 8 பேரைக் கைது செய்தமை தொடர்பாகவே இத்தகைய செயல்கள் பிரித்து வைப்பவர்களுக்குத் தேவையாக அமைகிறது என்று மட்டும் கூறினார். அநுரா குமார திசநாயக்காவும் ஈழத்தமிழர் இறைமை அவர்களின் தேசஇனம் என்ற தகுதிகளை மறுத்துப் பாதிக்கப்பட்ட சமுகம் ஒன்றுக்கான அனுதாபமாகவே தனது உரை முழுவதையும் கட்டமைத்தார். சுருக்கமாகச் சொன்னால் ராசபக்ச சிந்தனைகளுக்கும் ரணில் சிந்தனைகளுக்கும் இடதுசாரி விளக்கம் அளித்து நிறைவேற்றுவதே தேசிய மக்கள் சத்தியின் தலைமை நோக்கு என்பது அநுரகுமாராவின் உரையில் நன்கு தெளிவாகிறது என்பதை இலக்கு ஈழத்தமிழர்களுக்கு எடுத்துக்கூறிட விரும்புகிறது.

அநுரகுமார திசநாயக்கா ஈழத்தமிழர்களின் இறைமை மீட்பாக ஈழத்தமிழர் தேசியப் பிரச்சினையை பார்க்காது பேசித்திரிவது போலவே ஈழத்தமிழர்களின் அரசியல் வாதிகளும் புலம்பெயர் ஈழத்தமிழ் அரசியல்வாதிகளும் கூட ஈழத்தமிழர்களின் இறைமையைச் சிறிலங்காவின் இனஅழிப்பை அரசியலில் முன்னிலைப்படுத்தி மக்கள் இறைமையின் மூலம் அனைத்துலகச் சட்டங்கள் வழி பெற முயற்சிப்பது இல்லை. மாறாக ஈழத்தமிழர்களுக்கான அரசியலை சிறுபான்மையின உரிமை பெறுதலாக முன்னெடுத்துக் கெஞ்சிப் பெறலாம் கொஞ்சி அடையலாம் சலுகைகளை எனச் செயற்படுகின்றனர். இதுவே ஈழத்தமிழர்களால் 21ம் நூற்றாண்டின் உலகின் மிகக் கொடூரமான இனஅழிப்பைச் செய்தவர்களுக்கான தண்டனை நீதியையோ அல்லது பாதிக்கப்பட்டவர்களுக்கான பரிகார நீதியையோ இன்றுவரை 15 ஆண்டுகள் பெற இயலாது உள்ளதென்பது இலக்கின் உறுதியான எண்ணமாகவுள்ளது.

**ஆசிரியர்**

**கச்சதீவு விவகாரத்தை இந்தியாவின் ஆளும் பாஜ.க. தற்போது கைகளில் எடுத்துள்ளது. கடந்த பத்துவருடங்களாக பா.ஜ.க. ஆளும் கட்சியாக இருக்கின்ற போதிலும் கூட, இதுவரையில் இவ் விவகாரத்தை பெரிதாக எடுக்காத பா.ஜ.க. இப்போதுதான் பொது மேடைகளில் இது குறித்துப் பேசத் தொடங்கியிருக்கின்றது. இது வெறுமனே தேர்தலுக்கான தந்திரமா? அல்லது இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தத்தைக் கொடுப்பதற்கான உபாயமா?**



# கச்சதீவை மோடி கையில் எடுத்தது ரணிலுக்கு அழுத்தம் கொடுக்கவா?



இது இலங்கை மீதான அழுத்தத்தைக் கொடுப்பதற்கான முயற்சி எனக் கருதுவதற்கு எந்த நியாயமும் இல்லை. இலங்கை மீது அழுத்தங்களைக் கொடுப்பதற்குப் பதிலாக முடிந்தளவுக்கு தளர்வான நிலைப்பாட்டைத்தான் இந்தியா கையாள்கின்றது. இலங்கை மீது அழுத்தங் கொடுப்பதற்கான தேவை இந்தியாவுக்கு தற்போதைய கால கட்டத்தில் இல்லை.

மாறாக தமிழ்நாட்டிலிருந்து பிரதமரைத் தெரிவு செய்வோம் என்றொரு விடயத்தை பாரதீய ஜனதா கட்சி சில காலங்களுக்கு முன்னர் கூறியிருந்தது. இவ்வாறு சொல்வது தமிழர் ஒருவரைப் பிரதமராகத் தெரிவு செய்வது என்பதல்ல. மோடியை தமிழ் நாட்டிலிருந்து தெரிவு செய்தல். இந்தியாவின் தேர்தல் முறையின்படி ஒருவர் இரண்டு தொகுதிகளில் போட்டியிடலாம். அதன்படி மோடி தனது தொகுதியில் போட்டியிடுவார். அதேவேளையில் தமிழகத்தில் இராமேஸ்வரத்தை அண்டிய ஒரு பகுதியிலிருந்து அவர் போட்டியிடுவதாக ஒரு திட்டம் இருக்கின்றது. அதன்படி இராமேஸ்வரத்திலிருந்து கூடிய வாக்குகளைப் பெற்று தான் தெரிவு செய்யப்பட்டதாக காட்டுவதற்கான ஒரு நாடகம் தான் இது.



அண்மையில் புதிய நாடாளுமன்றக் கட்டடம் திறக்கப்பட்ட போது ஒரு செங்கோலைக் கொண்டு சென்று ஒரு நாடகமாடினார்கள். அதேபோல இராமர் கோவில் கட்டப்பட்ட போதும் தமிழ்நாட்டை மையப்படுத்திய ஒரு பெரிய நாடகத்தை அவர்கள் நடத்தினார்கள். இப்போது தமிழ்நாட்டு வாக்காளர்களை மையப் படுத்தி மோடி நடத்துகின்ற நாடகத்தின் ஒரு அங்கம்தான் இதுவே தவிர, அவர்கள் கச்சதீவை எந்த நிலையிலும் மீளப்பெறமாட்டார்கள். ஏனெனில் அதற்கு 1974 இல் செய்யப்பட்ட உடன்படிக்கை இடம்கொடுக்காது. இந்த உடன்படிக்கைக்கு இந்தியப் பாராளுமன்றத்தில் அங்கீகாரம் பெறப் படவில்லை என்பதுதான் அவர்களுடைய குற்றச் சாட்டு. அதனால், அதனை ரத்துச் செய்ய வேண்டும் என்று அவர்கள் கோருகின்றார்கள். ஆனால், அதனை இந்தியா செய்யாது.

இராஜதந்திர ரீதியாகக்கூட, கச்சதீவை மீளப் பெற்றுக்கொள்வது இந்தியாவுக்கு சாதகமானதல்ல. உண்மையில் கச்சதீவை இலங்கைக்குக் கொடுத்துவிட்டு, இந்திய மீனவர்களுக்கு அங்குள்ள உரிமைகளைப் பாதுகாப்பது தான் இந்தியாவுக்குத் தேவையான விடயம். அதனால், இது வெறுமனே ஒரு அரசியல் நாடகம். இராமேஸ்வரம் போன்ற பகுதிகளில் உள்ள மீனவர்களின் வாக்குகள் பெரும்பான்மையாக உள்ளன. அவர்களின் வாக்குகளைக் கவர்வதற்காகச் செய்யப்படுகின்ற கபடத்தனமான செயற்பாடுதான் இது.



**இந்தியத் தேர்தலுக்கான பரப்புரைகள் தீவிரமடைந்திருக்கும் நிலையில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கச்சதீவு கையில் எடுத்துள்ளார். இந்திய அரசியலில் கச்சதீவு விவகாரம் மீண்டும் இதனால் சூடுபிடித்துள்ளது. இது குறித்தும் கச்சதீவுக்கும் இரு நாட்டு மீனவர் பிரச்சினைக்கும் என்ன தொடர்பு என்பதையிட்டும் பொருளாதார, அரசியல் ஆய்வாளர் செல்வின் மரியாம்பிள்ளை அனைத்துலக உயிரோடைத் தமிழ் வானொலியின் தாயகக்களம் நிகழ்ச்சிக்கு வழங்கிய நேர்காணலை இலக்கின் வாசகர்களுக்காக இங்கேதருகின்றோம் இந்த நேர்காணலை காணொளியில் YouTube இல் முழுமையாகப் பார்ப்பதற்கு இங்குள்ள QR Code இனை ஸ்கான் (Scan) செய்யவும்.**

## செல்வின் மரியாம்பிள்ளை செவ்வி

**இரு நாடுகளுக்கும் இடையிலான மீனவர் பிரச்சினைக்கு கச்ச தீவு இலங்கைக்குக் கொடுக்கப் பட்டமைதான் காரணம் என தமிழக, இந்தியத் தலைவர்கள் கூறுகின்றார்கள். இதனை நீங்கள் ஏற்றுக்கொள்கின்றீர்களா?**

அது முழுமையான பொய். மீனவர் பிரச்சினை என்பது வேறு. கச்சதீவு என்பது வேறு. தேசிய அரசுகள் உருவாகிய பின்னர்தான் கடல் எல்லைகள் வரையறுக்கப்பட்டன. அவ்வாறு வரையறுக்கப்படுவதற்கு முன்னரே இவ்வாறான பிரச்சினைகள் இருந்தன. 1921 ஆம் ஆண்டு பிரித்தானியர்கள் ஆட்சியில் இருக்கும் போதே மதராசி பட்டணம் என்று சொல்லப்படுகின்ற அந்த அரசுக்கும் இங்குள்ள அரசுக்கும் இடையில் தொடர்பாடல்கள் இடம்பெற்றிருக்கின்றன. அப்போதே கச்சதீவை என்ன செய்வது என்பதில் சர்ச்சைகள் இருந்துள்ளன.

அதன்பின்னர் 1960 களில் இந்தியப் பிரதமராக இருந்த நேரு கச்சதீவை விட்டுக் கொடுப்பதில் எமக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை என்று தெரிவித்தார். அவரைப் பின் பற்றித்தான் அது கடலுக்குள் இருக்கும் ஒரு பாறை எனக் கருத்துப்படப் பேசியிருக்கின்றார். அதனால்தான் கச்சதீவை விட்டுக்கொடுப்பது என்பது அவர்களுக்கு ஒரு பெரிய விடயமாக இருக்கவில்லை.

இந்தியா தன்னுடைய பிரியத்துக்குரிய அயலானுடனான உறவை வளர்த்தெடுப்பது என்ற அடிப்படையில், பங்களாதேஷுக்கு விட்டுக்கொடுத்திருக்கின்றது. சீனாவுக்கு விட்டுக்கொடுத்திருக்கின்றது. இந்த வகையில் இலங்கையுடனான உறவை கட்டியெழுப்புவது என்ற அடிப்படையில்தான் இந்திரா காந்தி கச்சதீவை விட்டுக்கொடுக்க முன்வந்தார். அதற்குப் பின்னணியில் நட்பார்ந்த இராஜதந்திரம் ஒன்றுள்ளது.

எனவே, கச்சதீவு என்பது வேறு. மீனவர் பிரச்சினை என்பது வேறு. 19 ஆம் நூற்றாண்டிலேயே இந்த பாரம்பரிய கடல் பகுதியில் இரு நாட்டு மீனவர்களும் வந்து சென்றார்கள். எந்தப் பிரச்சினையும் இருக்கவில்லை. கச்சதீவிலும் இந்திய, இலங்கை மீனவர்கள் வந்து தங்கியிருந்து மீன்பிடித்தார்கள். உறவாடினார்கள். எந்தப் பிரச்சினையும் இருக்கவில்லை.

கச்சதீவை இலங்கைக் கடற்பகுதிக்குள்

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

# இஸ்லாமிய கடும்போக்கு செயற்பாடுகளை இலங்கை புலனாய்வுத்துறையே திட்டமிடுகின்றது

மட்டு.நகரான்

ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் தொடர்பில் பல்வேறு கருத்துருவாக்கங்கள் தற்போது வெளியிடப்பட்டுவருகின்றன. பல்வேறு சந்தேகங்களும் பல்வேறு குற்றச்சாட்டுகளும் தொடர்ச்சியாக முன்வைக்கப்படுகின்றன. இந்த குற்றச்சாட்டுகள்,சந்தேகங்கள் போன்றவற்றினை யாராவது இலகுவில் கடந்துசெல்வதற்கு முடியாத நிலைமையே காணப்படுகின்றது.



குறிப்பாக ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் என்பது இஸ்லாமிய பயங்கரவாதிகளின் தாக்குதல், உலக நாடுகளை எச்சரிப்பதற்காகவும் இலங்கை அரசாங்கத்தினை எச்சரிப்பதற்காகவும் பௌத்தர்களை எச்சரிப்பதற்காகவும் நடாத்தப்பட்ட தாக்குதல் என்று பல்வேறு கருத்துகள் முன்வைக்கப்பட்டாலும் இந்த தாக்குதல் மட்டக்களப்பில் நடாத்தப்பட்டமையானது இந்த நாட்டில் இனவாத முதலீடை கொள்வதற்காகவே என்பதை அன்றே தமிழர்கள் புரிந்துகொண்டார்கள். ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் மூலம் இந்த நாட்டில் மற்றுமொரு சிறுபான்மை சமூகம் அடக்கப்பட்டதுடன் பெரும்பான்மையினம் தனது கோரமுகத்தினை தேர்தல் மூலம் வெளிப்படுத்தியிருந்தது.

உண்மையில் உணர்வுரீதியான விடயங்களை விதைத்து இந்த நாட்டில் சிறுபான்மை சமூகத்தினை பெரும்பான்மை சமூகத்தினையும் பிரித்தாளும்தந்திரமும் சிறுபான்மை இனங்களுக்கு இடையில் முன்னெடுக்கப்படும் பிரித்தாளும் தந்திரங்களும் காலத்திற்கு காலம் வெற்றிபெறவே செய்கின்றது.

ஈஸ்டர் குண்டுத்தாக்குதலானது கிழக்கில் பிள்ளையானையும் தெற்கில் கோத்தபாயவினையும் அரியாசனம் ஏற்றியது.ஈஸ்டர் தாக்குதலானது கிழக்கில் அதிலும் மட்டக்களப்பில் இரண்டு அரச தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்களை உருவாக்கியது. இதற்கான பிரதான காரணமாகயிருந்தது ஈஸ்டர் குண்டுத்தாக்குதலும் அதன் மூலமாக சிறுபான்மை சமூகத்திற்குள்ளும் சிறுபான்மை-பெரும்பான்மை சமூகத்திற்குள் முன்னெடுக்கப்பட்டுவந்த இனவாத பிரசாரங்களுமே காரணமாக அமைந்தன.



கிழக்கு மாகாணத்தினை பொறுத்தவரையில் இலங்கையில் இனவாத பிரசாரங்களுக்கும் இனங்களிடையே குரோதங்களை ஏற்படுத்தி சுயலாபம் தேடும் முயற்சிகளும் தொடர்ச்சியாகவே முன்னெடுக்கப்பட்டுவருகின்றது என்பதை நாங்கள் கடந்த காலத்தில் பல்வேறு கட்டுரைகள் மூலம் வெளிப்படுத்தியிருக்கின்றோம்.

கிழக்கில் இந்த நிலைமையானது யுத்த காலத்தில் கடுமையானதாகயிருந்தது. கிழக்கில் உள்ள தமிழர்களையும் முஸ்லிம்களையும் எதிரிகளாகவே மாற்றிவைத்திருந்தனர். அதன்மூலம் தெற்கில் தங்களது அரசியலையும் முஸ்லிம்கள் மூலமும் தமிழர்களிலிருந்த அதிர்ப்தியை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்தும் சூழ்நிலையும் பெரும்பான்மையின சிங்கள பௌத்த அரசுகளிடமிருந்துவந்தது.

யுத்தம் மௌனிக்கப்பட்ட பின்னர் இந்த நிலைமையானது மாறுபட்ட ரீதியில் முன்னெடுக்கப்பட்டுவருகின்றது.அரசியல் ரீதியாக இரு இனங்களையும் மோதவிடுதல், இனங்களிடையே அபிவிருத்தி தொடர்பில் வேறுபாடுகளை ஏற்படுத்தல் என பல்வேறு வழிகளை கையாண்டுவந்த அரசுகள் இறுதியாக எடுத்துக்கொண்ட விடயமே ஈஸ்டர் குண்டுத்தாக்குதலாகும்.

ஈஸ்டர் குண்டுத்தாக்குதல்கள் குறித்து பல்வேறு கருத்துகளும் தகவல்களும் வெளிவந்துகொண்டிருக்கும் நிலையில் மட்டக்களப்பில் பிள்ளையானும் தெற்கில் கோத்தபாயவும் இரண்டு புத்தகங்களை வெளியிட்டுள்ளமையானது பல்வேறு சந்தேகங்களையும் அனைத்துதரப்பினர் மத்தியிலும் ஏற்படுத்தியுள்ளது.



குறிப்பாக தேர்தல்கள் இந்த நாட்டில் அறிவிக்கப்படவிருக்கும் நிலையில் இவ்வாறான புத்தகங்கள் வெளியிட்டுள்ளமையானது எதிர்காலத்தில்இனங்களிடையே விரிசல்களை ஏற்படுத்துவதற்கான ஏற்பாடுகளாகயிருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்திருக்கின்றது. அதிலும் ஈஸ்டர் குண்டுத்தாக்குதல்கள் தொடர்பில் பல்வேறு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ள பிள்ளையானும் கோத்தபாயவும் இந்த புத்தகத்தினை வெளியிட்டுள்ளமை கிழக்கு தமிழர்கள் மத்தியில் பெரும் சந்தேகத்தினை ஏற்படுத்தியுள்ளது.



இந்த நிலையில் கிழக்கில் முஸ்லிம் எதிர்ப்பினை வைத்து தமது அரசியலை வளர்க்கமுற்படும் பிள்ளையானின் செயற்பாடுகள் குறித்து இங்கு வெளிப்படுத்தவேண்டிய தேவை எமக்கு இருக்கின்றது. அரசியலுக்காக முஸ்லிம்கள் மீதான எதிர்ப்பினை வெளிக்காட்டும் பிள்ளையான் தமது சொந்த தேவைகளுக்காகவும் தமது கஜானாவினை நிரப்புவதற்காகவும் முஸ்லிம் அரசியல்வாதிகளுடன் இணைந்து செயற்படுவது தொடர்பில் பலர் அறியாத விடயங்கள் பல உள்ளன.



குறிப்பாககிழக்குமாகாணமுதலமைச்சராக பிள்ளையான் இருந்தபோது வாகரை பகுதியில் ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிகள் இஸ்லாமிய பல்கலைக்கழகம் அமைப்பதற்கு அப்போதைய அமைச்சராகயிருந்த ஹிஸ்புல்லாவுக்கு வழங்கப்பட்டது. இதற்கு பின்னணியாகயிருந்து அவருக்கு காணியை வழங்கியவர் பிள்ளையான். ஆனால் ஈஸ்டர் குண்டுத்தாக்குதலுக்கு பின்னர் அந்த பல்கலைக்கழகத்தினை வைத்து இஸ்லாமியர்களுக்கு எதிராக பிரசாரங்களை முன்னெடுத்தவரும் இந்த பிள்ளையான்தான்.

இதேபோன்று தமிழர் பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிகள் அக்காலப் பகுதியில் இஸ்லாமிய வர்த்தகர்களுக்கு வழங்கப் பட்டது. இவற்றிற்கெல்லாம் பின்னணியாகயிருந்து செயற்பட்டவர் இந்த பிள்ளையானாகும்.

பிள்ளையானின் கட்சிகளில்மிக பொறுப்புமிக்க பதவிகளை வகித்து உயிர் அச்சுறுத்தல் காரணமாக வெளிநாட்டுக்கு தப்பிச்சென்றுள்ள அசாத் மௌலான என்பவர் வழங்கிய வாக்குமூலங்கள் பிள்ளையானை இலங்கை சிங்கள பௌத்தபேரினவாதம் எவ்வாறு பயன்படுத்திவருகின்றது என்பது புலனாகின்றது.



இலங்கையினைப்பொறுத்த வரையில் தமிழர்களின் விடுதலைப்போராட்டம் என்பது மட்டு தமிழர்களின் உரிமைக்காக நடாத்தப்பட்ட போராட்டமாகயிருக்கின்றது. ஏனைய அனைத்தும் தமிழர்களின்விடுதலைப்போராட்டத்தினைமழுங்கடிப்பதற்காகவும் சிறுபான்மை மக்களிடையே ஒற்றுமையினை சீர்குலைப்பதற்காகவும் மிகவும் திட்டமிட்ட வகையில் முன்னெடுக்கப்பட்டுவரும் செயற்பாடுகளாகவே பார்க்கப்படுகின்றது.

கிழக்கினைப் பொறுத்த வரையில் இங்கு வளர்க்கப்படும் இஸ்லாமிய வாபிஸ கொள்கை, இஸ்லாமிய கடும்போக்கு செயற்பாடுகள் என்பது எல்லாம் வேறு எங்கும் திட்டமிடப்படுவது அல்ல. இவை முற்றுமுழுதாக இலங்கை புலனாய்வுத்துறை மூலமே திட்டமிடப்பட்டு கொண்டுவரப்படுகின்றது. இவற்றினை

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

# சிறுதோட்டக் கனவு சாத்தியமாகுமா?

துரைசாமி நடராஜா

பெருந்தோட்ட மக்களின் பொருளாதாரச்சுமை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. உழைப்புக்கேற்ற ஊதியமின்றி அவர்கள் அல்லல்படுகின்றனர். இந்நிலையில் அம்மக்களின் பொருளாதாரச் சுமைக்கு பரிகாரத்தை பெற்றுக் கொடுக்கும் நோக்கிலும், காணியுரிமைக் கனவை மெய்ப்பிக்கும் நோக்கிலும் அம்மக்களை சிறுதோட்ட உரிமையாளர்களாக மாற்றவேண்டியதன் அவசியம் தொடர்பில் தொடர்ச்சியாக கருத்து வெளிப்பாடுகள் இருந்து வருகின்றன. ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி போன்ற பெரும்பான்மைக் கட்சிகளும் சமகாலத்தில் இது குறித்து ஆழமான வலியுறுத்தலை வெளிப்படுத்தியுள்ளன. எனினும் இது வெறும் வாக்குறுதியாக அல்லாது செயல்வடிவம் பெற வேண்டும் என்பதே பலரினதும் எதிர்பார்ப்பாக உள்ளது.



பெருந்தோட்ட மக்கள் இந்நாட்டின் தேசிய வருமானத்தில் கணிசமான வகிபாகத்தைக் கொண்டுள்ளனர். வெளிநாட்டு வேலை வாய்ப்பின் ஊடான அந்நியச் செலாவணி உழைப்பு, ஆடைத்தொழிற்சாலை, தேயிலைத் தொழிற்றுறை என்று பல்வேறு மட்டங்களிலும் பெருந்தோட்ட மக்களின் வகிபாகத்தை குறைத்து மதிப்பிட முடியாது. 1959 இல் இலங்கை அந்நியச் செலாவணி உழைப்பில் தேயிலையின் பங்கு 59.6 வீதமாக அமைந்திருந்தது. 1969 இல் 57.8, 1976 இல் 43.6, 1978 இல் 48.5, 1982 இல் 29.6, 1986 இல் 27.2, 1987 இல் 25.9, 1988 இல் 26.2, 1990 இல் 24.9 வீதமாக இலங்கையின் அந்நியச் செலாவணி உழைப்பில் தேயிலையின் பங்கு அமைந்திருந்தது. இதில் பெருந்தோட்டங்களின் மூலமான வருவாயும் அதிகமாகும்.

இதேவேளை தேயிலை உற்பத்தியைப் பொறுத்தவரையில் 1945 இல் இலங்கையின் தேயிலை உற்பத்தி125.6 மில்லியன் கிலோ கிராமாகும். 1955 இல் 172.5, 1965 இல் 228.6, 1972 இல் 213.9, 1976 இல் 196.6, 1978 இல் 198.9, 1982 இல் 187.8, 1986 இல் 211.3, 1988 இல் 227.2, 1989 இல் 207.0, 1990 இல் 233.0 மில்லியன் கிலோ கிராமாக தேயிலை உற்பத்தி காணப்பட்டது. பெருந்தோட்டங்களைப் பொறுத்தவரையில் 1995 இல் 168.8, 2000 இல் 100.1, 2005 இல் 111.5, 2010 இல் 100.8, 2017 இல் 104.0 மில்லியன் கிலோ கிராம்களாக தேயிலை உற்பத்தி அமைந்திருந்தது. இவற்றினூடாக இலங்கை அதிகளவு அந்நியச் செலாவணியை பெற்றுக் கொள்ள முடிந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

### அபிவிருத்தியின் பிரதிபலிப்பு

பெருந்தோட்ட தேயிலைத் தொழிற்றுறை நாட்டின் முதுகெழும்பாக இருந்தபோதும் இத்தொழிற்றுறையை பாதுகாப்பதில் அரசாங்கம் காத்திரமான முன்னெடுப்புக்களை மேற்கொள்ளவில்லை என்பது கசப்பான உண்மையாகும். இலங்கையில் நான்கு இலட்சத்துக்கும் அதிகமான சிற்றுடைமைகள் காணப்படுகின்றன. 1983 ம் ஆண்டில் இலங்கையின் மொத்த தேயிலை நிலப்பரப்பில் 75,769 ஹெக்டேயர் நிலப்பரப்பில் சிற்றுடைமை காணப்பட்டது.




இது மொத்த தேயிலை நிலப்பரப்பில் 36 வீதமாகும். இந்நிலையில் 31 வருடங்களின் பின்னர் அதாவது 2014 இல் சிற்றுடைமை நிலப்பரப்பு ஏறக்குறைய இரண்டு மடங்கை நெருங்கிய நிலையில் ஒரு இலட்சத்து 32 ஆயிரத்து 335 ஹெக்டேயராக விஸ்தரிக்கப்பட்டதுடன் மாவட்ட ரீதியான பரம்பலிலும் கணிசமான மாற்றங்கள் இடம்பெற்றன. 1983 இல் கண்டி மாவட்டத்திலும், 1994 இல் காலி மாவட்டத்திலும், 2005, 2014 ஆகிய ஆண்டுகளில் இரத்தினபுரி மாவட்டத்திலும் சிறுதோட்டங்களின் பரப்பு அதிகமாக காணப்பட்டது. இதனடிப்படையில் 2014 இல் இரத்தினபுரி மாவட்டத்தில் 30,447 ஹெக்டேயர் நிலப்பரப்பு சிற்றுடைமைகளுக்கு சொந்தமானதாக இருந்தது.



இன்று சிறுதோட்டங்களின் நிலப்பரப்பில் சுமார் 62 வீதமானவை இரத்தினபுரி, மாத்தறை, காலி ஆகிய மூன்று மாவட்டங்களிலேயே காணப்படுகின்றன. இம்மாவட்டங்கள் யாவும் தாழ்நில வலயத்தில் அமைந்துள்ள மாவட்டங்களாகும். இந்நிலையில் தேயிலை உற்பத்தியில் தாழ்நில வலயத்தில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்கள் பெருமளவில் சிறுதோட்டங்களில் ஏற்பட்டிருக்கும் அபிவிருத்தியின் பிரதிபலிப்பாக காணப்படுவதாக புத்திஜீவிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதேவேளை இலங்கையில் நான்கு இலட்சத்துக்கும் அதிகமான சிறுதோட்ட உடைமைகள் காணப்படும் நிலையில் அரசாங்கம் சிறுதோட்டங்களின் அபிவிருத்தி கருதி பல்வேறு சலுகைகளை மேற்கொண்டு வருகின்றது. நிவாரணங்கள் மற்றும் கடன் வசதிகள் எனப்பலவும் இதில் உள்ளடங்கும். இதனால் தொழிற்றுறை அதிகரித்த தேசிய வருவாயை பெற்றுக் கொடுக்கும் ஒரு தொழிற்றுறையாக மாற்றம் பெற்றுள்ளது.

சிற்றுடைமைகளின் தேயிலை உற்பத்தியைப் பொறுத்தவரையில் 1995 இல் 111.3, 2000 இல் 183.8, 2005 இல் 205.7, 2010 இல் 230.1, 2017 இல் 244.0 மில்லியன் கிலோ கிராம்களாக அமைந்திருந்தது. இக்காலப்பகுதியில் இலங்கையின் மொத்த தேயிலை உற்பத்தி முறையே 280.1, 280.9, 317.2, 330.9, 348.0 மில்லியன் கிலோ கிராம்களாக அமைந்திருந்த நிலையில் அண்மைகாலமாக சிறுதோட்டங்களின் தேயிலை உற்பத்தியானது, பெருந்தோட்டங்களின் தேயிலை உற்பத்தியினை முந்திச் செல்வதையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. அரசாங்கம் பெருந்தோட்டங்களை புறக்கணித்துச் செயற்படும் மாற்றாந்தாய் மனப்பான்மையும் இதற்கொரு காரணமாகும் என்பதை மறுப்பதற்கில்லை.




பெருந்தோட்டத் தொழிலாளர்களைப் போன்றே பெருந்தோட்டங்களும் இன்று பல்வேறு சவால்களுக்கும் முகம் கொடுத்து வருகின்றன. இதேவேளை கம்பனியினர் தோட்டங்களை கொண்டு நடாத்துதில் தாம் சிக்கல்கள் பலவற்றையும் எதிர்கொள்வதாகத் தெரிவிக்கின்றனர். பெருந்தோட்டக் கம்பனிகளின் கீழ் உள்ள தோட்டங்களில் சுமார் ஒரு இலட்சத்து ஆயிரம் பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களே பணியாற்றி வந்தாலும் இத்தொழிலோடு மறைமுகமாக இணைந்திருப்பவர்களின் எண்ணிக்கை சுமார் 20 இலட்சமாகும்.

இத்தனைபேரின் வாழ்வாதாரம் தங்கியிருக்கும் இத்துறையை தாம் மிகவும் நெருக்கடிக்கு

தொடர்ச்சி 09 ஆம் பக்கம்

# ஈரான் சந்தித்த பேரிழப்பு
# பதில் தாக்குதல் என்ன?

வேல்ஸ் இல் இருந்து அருஸ்

சிரியாவில் மீண்டும் இஸ்ரேலின் விமானங்கள் மேற்கொண்ட துல்லியமான ஏவுகணைத் தாக்குதலில் ஈரானின் 3 ஜெனரல் தர அதிகாரிகள் உட்பட 7 படையததிகாரிகளும் ஹிஸ்புல்லா படையினர் இருவரும் மற்றும் சிரியா படையினர் 6 பேரும் கொல்லப்பட்டுள்ளனர்.



ஈரானிய தூதுவரின் சிறப்பு இல்லத்தின் மீதே தாக்குதல் இடம்பெற்றுள்ளது. கட்டடம் முற்றாக தரைமட்டமாகியபோதும் ஈரானிய தூதுவர் உயிர்தப்பியுள்ளார்.

திங்கட்கிழமை(1) மாலை 5 மணியளவில் சிரியாவில் உள்ள இஸ்ரேலினால் கைப்பற்றப்பட்ட கொலன் கெயிட் பகுதியில் இருந்து இஸ்ரேல் ஏவுகணைத் தாக்குதலை மேற்கொண்டதாகவும், அவற்றில் பலவற்றை தாம் சுட்டுவீழ்த்தியபோதும் சில சிரியாவின் தலைநகரான டொமகஸ் பகுதியில் உள்ள ஈரானின் தூதரகத்திற்கு அருகில் உள்ள கட்டடத்தை தாக்கியதால் இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளதாக சிரியாவின் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஆனால் அமெரிக்க தயாரிப்பான இஸ்ரேலின் எப்-35 விமானங்கள் இந்த இலக்கு மீது ஆறு ஏவுகணைகளை ஏவியதாக ஈரான் தெரிவித்துள்ளது. கொல்லப்பட்டவர்களில் ஈரானின் இஸ்லாமிய புரட்சிப் படையின் வெளியக புலனாய்வு மற்றும் நடவடிக்கை படைப்பிரிவான காட் படையின் லெபனான் மற்றும் சிரியாவுக்கு பொறுப்பான கட்டளை அதிகாரி பிரிகேடியர் ஜெனரல் மொகமட் ரெசா சகீடி முக்கியமானவர். அவருடன் பிரதிக் கட்டளை அதிகாரியான பிரிகேடியர் ஜெனரல் ஹஜ் ரகிமி சகடியும் கொல்லப்பட்டுள்ளார். மேலும் காட் படைப்பிரிவின் தலமை அதிகாரி பிரிகேடியர் ஜெனரல் கொசெயின் அமினெல்லாவும் கொல்லப்பட்டுள்ளார்.



2020 ஆம் ஆண்டு காட் படைப்பிரிவின் கட்டளை அதிகாரி ஜெனரல் சொலமானி ஈராக்கில் வைத்து கொல்லப்பட்டபின்னர் அந்த பொறுப்பை ஏற்றிருந்த ஜெனரல் சகீடி மிகவும் பிரபலமானவர். எனினும் இது தொடர்பில் இஸ்ரேல் கருத்துக்களை தெரிவிக்கவில்லை, இஸ்ரேலுக்கு வெளியில் இடம்பெறும் தாக்குதல்களை இஸ்ரேல் ஒருபோதும் உரிமைகோருவதில்லை. இருந்தபோதும் இஸ்ரேல் இந்த தாக்குதலை மேற்கொண்டதாக இஸ்ரேலிய அதிகாரிகளை ஆதாரம் காட்டி த நியூயோர்க் ரைம்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது. மிக முக்கிய அதிகாரிகளின் இழப்பு என்பது ஈரானுக்கு பலத்த பின்னடைவானது என அது மேலும் தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் டிசம்பர் மாதம் சிரியாவின் தலைநகர் மீது இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதலில் காட் படைப்பிரிவின் ஜெனரல் ராசி மௌசவி கொல்லப்பட்டிருந்தார். அதற்கு பதிலடியாக ஈராக்கில் இருந்த இஸ்ரேலின் மொசாட் தளத்தின் மீது ஈரான் மேற்கொண்ட ஏவுகணைத்தாக்குதலில் இஸ்ரேலின் மொசாட்டுடன் இணைந்து வர்த்தகத்தில் ஈடுபட்ட செல்வந்தர் உட்பட பல இஸ்ரேலிய அதிகாரிகள் கொல்லப்பட்டிருந்தனர்.





தற்போதைய தாக்குதல் ஈரானை அதிக சினமூட்டியுள்ளது. இந்த தாக்குதலை தொடர்ந்து செவ்வாய்க்கிழமை(2) ஈரானில் உள்ள சுவிற்சலாந்து தூதுவரை அழைத்த ஈரானிய அரசு அமெரிக்காவுக்கு தமது பதில் தாக்குதல் தொடர்பில் இரகசிய தகவல்களை அனுப்பியுள்ளதுடன், இஸ்ரேலிய இலக்குகளை தேடி தாக்குமாறு திங்கட்கிழமை இரவு இடம்பெற்ற உயர்மட்ட பாதுகாப்பு மாநாட்டில் தமது படையினருக்கு ஈரானின் அரச தலைவர் அயோரல்லா சயீட் அலி காமெனி கட்டளையிட்டுள்ளதாக ஈரான் ஒப்சேவர் ஊடகம் தெரிவித்துள்ளது.

இந்த கூட்டத்தில் கலந்துகொண்ட ஈரானின் தேசிய பாதுகாப்புச் சபையின் செயலாளர் அலி அக்பர் தெகிரானில் இருந்து புறப்பட்டு அஸ்ரானாவில் இடம்பெறும் சங்காய் கூட்டமைப்பின் பாதுகாப்புத்துறை தலைவர்கள் கலந்துகொள்ளும் கூட்டத்தில் கலந்துகொள்வதற்கு சென்றுள்ளார்.

அதேசமயம் இந்த தாக்குதல் தொடர்பில் தகவல்வெளியிட்டுள்ள ரஸ்யாவின் ஊடகத் துறை பேச்சாளர் டிமிற்றி பெஸ்கோவ் இது அனைத்துலக விதிகளை மீறிய தாக்குதல், தூதரகங்கள் மீது தாக்குதல் நடத்தப்படக்கூடாது என்ற வியன்னாவின் விதிகளை மீறிய செயல் என தெரிவித்ததுடன் கடும் கண்டனங்களையும் வெளியிட்டுள்ளார்.

ரஸ்யாவின் வெளியக புலனாய்வுத்துறையான எஸ்.வி.ஆரின் தலைவர் செர்ஜி நரிஸ்கின் இதனை ஒரு பயங்கரவாத தாக்குதல் என தெரிவித்துள்ளார். இந்த தாக்குதல் தொடர்பில் தமக்கு மேலதிக தகவல்கள் கிடைத்துள்ளதாகவும், அதனை தற்போது வெளியிட முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



அதேசமயம், பொதுமக்கள் நெருக்கமாக வாழும் பகுதியில் இந்த தாக்குதல் இடம் பெற்றுள்ளதால் இது பிராந்திய மோதலாக மாறும் சாத்தியங்கள் உள்ளதாக ரஸ்யா தெரிவித்துள்ளது. ரஸ்யாவின் இந்த கருத்து என்பது சிரியாவில் உள்ள பொதுமக்களை பாதுகாப்பதற்கு தனது நவீன எஸ்-400 வகை வான்பாதுகாப்பு ஏவுகணைகளை சிரியாவுக்கு வழங்குமா என்ற கேள்விகளை எழுப்பியுள்ளது.

சீனா, கட்டார், எகிப்த்து, சிரியா, மலேசியா, சவுதி அரேபியா உட்பட பல நாடுகள் தமது கண்டனங்களை தெரிவித்துள்ளதுடன், ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையும் அவசரமாக கூடியிருந்தது. அதில் அமெரிக்க செங்கடல் தாக்குதல் தொடர்பில் கவலை தெரிவித்திருந்தது.

ஏனைய நாடுகள் மீது இஸ்ரேல் நடத்தும் தாக்குதல்கள் தற்போது மிகப்பெரும் சிக்கல்களை அனைத்துலக மட்டத்தில் தோற்றுவித்துள்ளது. அனைத்துலக சட்டங்களை இஸ்ரேல் மதிக்காததை அனுமதிக்கும் மேற்குலகம் ரஸ்யா மட்டும் அனைத்துலக விதிகளை பின்பற்றவேண்டும் என நினைக்கின்றதா என்ற கேள்விகள் எழுந்துள்ளன.

என்றுமில்லாதவாறு மிகப்பெருமளவில் ஈரானில் இருந்து ஆயுதங்கள் ஹிஸ்புல்லாக்களின் பகுதிக்கு கடந்த சில மாதங்களாக கொண்டு செல்லப்பட்டிருந்ததுடன், ரஸ்யாவின் மிகப்பெரும் வெப்பக்கனல்களை கக்கும் ரி.ஒ.எஸ் எனப்படும் பல்குழல் உந்துகணை செலுத்திகளும் ஹிஸ்புல்லாக்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக அண்மையில் தகவல்கள் வெளியாகியிருந்தன.



இந்த நிலையில் ஹமாஸ், சிரிய, ஹிஸ்புல்லா அதிகாரிகளை சந்திக்க ஈரானின்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# நெத்தன்யாகுவுக்கு எதிராக இஸ்ரேலில் அதிகரித்துவரும் ஆர்ப்பாட்டங்கள்

காஸா மீது இஸ்ரேல் அரசு போர் தொடங்கி, ஆறு மாதங்கள் கடந்த நிலையிலும், 32000 க்கு மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்ட பின்புலத்திலும், இஸ்ரேல் அரச கட்டடங்களுக்கு வெளியே ஆயிரக்கணக்கான மக்கள், அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டுவருகின்றனர். அரசுக்கு எதிரான பல கோரிக்கைகளை முன்வைத்திருக்கும், மக்கள் 'நெத்தன்யாகு உடனடியாகப் பதவி விலக வேண்டும்' என்பதையும் வலியுறுத்திவருகின்றனர்.

ஜெரூசலத்திலும், தலைநகரான ரெல் அவிவிலும் திரண்டிருந்த ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைப்பதற்காக நீர்த்தாரைப் பிரயோகத்தைக் காவல்துறையினர் பயன்படுத்தியிருப்பதுடன், ஆர்ப்பாட்டக்காரர்களைத் பின்தள்ளி அவர்கள் பின்னே போகச் செய்திருக்கின்றனர்.

### எங்கெங்கெல்லாம் மக்கள் ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள்?

நெத்தன்யாகுவின் அரசின் மீதான மக்களது அதிருப்தி தற்போது முன்னரைவிட அதிகமாகியிருக்கும் காரணத்தினால், மக்கள் முன்வைத்திருக்கும் கோரிக்கைகளில் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன.



'பணயக்கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும்' என்று தொடக்கத்தில் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரிக்கையை முன்வைத்திருந்தனர். போர் தொடங்கி நான்கு மாதங்கள் கடந்த நிலையில், பணயக்கைதிகளை விடுவிக்க அரசு போதிய நடவடிக்கையை எடுக்கவில்லை என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

"ஆனால் தற்போதைய ஆர்ப்பாட்டங்களைப் பார்க்கும் போது, அவை நெத்தன்யாகு அரசை முழுமையாக எதிர்க்கின்ற ஆர்ப்பாட்டங்களாக பரிணாமம் எடுத்திருக்கின்றன" என்று அல் ஜஸீரா ஊடகவியலாளரான சால்ஹட் (Salhut) தெரிவித்தார். "தேர்தல்கள் விரைவில் நடத்தப்படவேண்டும் என்றும், நெத்தன்யாகு பதவியை விட்டு அகற்றப்பட வேண்டும் என்றும் ஜனவரியிலிருந்து ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரிவருகின்றனர்.

"ஹமாஸ் போராளிகளால் இஸ்ரேலிலிருந்து கடத்திச்செல்லப்பட்ட பணயக்கைதிகள் விடுவிக்கப்படுவதற்கு ஏதுவாக, உடனடியாக ஹமாசுடன் பேச்சுவார்த்தையை மேற்கொண்டு, போர்நிறுத்தத்தைக் கொண்டுவரவேண்டும்" என்று இந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் அழுத்தம் கொடுத்துவருகின்றனர்.

### முன்கூட்டிய தேர்தல்களும் நெத்தன்யாகுவின் பதவிவிலகலும்

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 7ம் திகதி, இஸ்ரேலின் தென் பகுதியிலுள்ள இராணுவ நிலைகள் மீதும், அவற்றைச் சுற்றியிருந்த கிராமங்கள் மீதும் தாக்குதலை மேற்கொண்டதைத் தொடர்ந்து, 200 இஸ்ரேலியர்களை ஹமாஸ் போராளிகள், பணயக்கைதிகளாகப் பிடித்துச் சென்றிருந்தனர். நவம்பர் மாதம் மேற்கொள்ளப்பட்ட தற்காலிகப் போர்நிறுத்தத்தின் போது, ஏறக்குறைய அரைவாசி எண்ணிக்கையைக் கொண்ட பணயக்கைதிகள் விடுவிக்கப்பட, அதற்கு மாற்றீடாக இஸ்ரேலின் சிறைகளிலிருந்து பல பாலஸ்தீனக் கைதிகள் விடுவிக்கப்பட்டனர்.



பணயக்கைதிகள் சிலரது உறவினர்களையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் நடுவில் காண முடிந்தது. எனது மாமா (கணவனின் தந்தை) விடுவிக்கப்பட வேண்டும் என்று ஜெரூசலத்தில் ஆர்ப்பாட்டம் செய்துகொண்டிருந்தவர்களுடன் இணைந்திருந்த அயாலா மெற்ஸ்கர் (Ayala Metzger) , அல்ஜஸீராவின் ஹம்டா சல்ஹட்டிடம் தெரிவித்தார். "எப்படியாவது அவரைத் திருப்பிக் கொண்டுவந்து தாருங்கள்."

### இந்த ஆர்ப்பாட்டங்கள் முக்கியமானவையா?

'பேச்சுவார்த்தையில் எதிரணியின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதைவிட, பணயக்கைதிகளை விடுவிப்பதற்கு இராணுவ வழிமுறையே சிறந்தது' என்ற நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கும் நெத்தன்யாகுவுக்கு எதிராக பன்னாட்டளவிலும், உள்நாட்டிலும் எதிர்ப்புகள் வலுவடைந்துவருகின்றன.

அமெரிக்கா உள்ளிட்ட இஸ்ரேலின் நட்பு நாடுகள் கடுமையாக எதிர்க்கின்ற போதிலும் கூட, "றாவா (Rafah) நகரத்தை முற்றுகையிடத் தங்கள் இராணுவம் தயாராக இருக்கின்றது" என்று கடந்த ஞாயிறு அன்று நடைபெற்ற ஒரு பத்திரிகையாளர் சந்திப்பில் நெத்தன்யாகு தெரிவித்திருந்தார்.



'போர் நிறுத்தம் முன்னெடுக்கப்பட வேண்டும்' என்று ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு கவுன்சில் கடந்த வாரம் ஒரு தீர்மானத்தை மேற்கொண்டது. இந்தத் தீர்மானம் முன்னெடுக்கப்படுவதைச் சாத்தியமாக்கும் வகையில், அமெரிக்கா வாக்களிப்பதைத் தவிர்த்தது. அமெரிக்க, இஸ்ரேல் உறவில் இது ஒரு பின்னடை வாகவே கருதப்படுகிறது.

தமிழில்: ஜெயந்திரன்

### நெத்தன்யாகுவைப் பதவிவிலக வைக்கக்கூடிய ஆற்றல் ஆர்பாட்டங்களுக்கு இருக்கின்றனவா?

இஸ்ரேல் மக்களில் அதிகமானோர் நெத்தன்யாகுவின் அணுகுமுறைக்கு ஆதரவாக இருக்கின்றார்கள் என்று அவதானிகள் பலர் கருதுகிறார்கள்.

"ஹமாஸ் முற்றாக அழிக்கப்பட வேண்டும்" என்ற அணுகுமுறையை நெத்தன்யாகு கொண்டிருக்கும் வரை, நெத்தன்யாகுவின் கொள்கைகளைப் பெரும்பாலான இஸ்ரேலியர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்றும், அரசுக்குள் அவரைப் பதவிவிலக வைப்பதற்கு போதியளவு எதிர்ப்பு இருக்கும் என்று தான் நினைக்கவில்லை என்றும், யூத இனத்தைச் சேர்ந்த வாசகர்களைப் பெருமளவிற் கொண்டிருக்கின்ற போவேட் (Forward) என்ற பெயரில் இயங்கும் இணையத்தளத்துக்கு அசோசியேற்றட் பிறெஸ் (Associated Press) இன் மேனாள் ஆசிரியரான டான் பெரி (Dan Perry) ஆக்கம் ஒன்றை எழுதியிருந்தார்.



பணயக் கைதிகளை விடுவிப்பதற்கான சிறந்த வழி, 'ஹமாசின் மீது இராணுவ ரீதியான அழுத்தத்தைக் கொடுப்பதே' என்று இஸ்ரேலிய நாளிதழ் ஒன்று நடத்திய கருத்துக்கணிப்பில் 81.5 வீதமான இஸ்ரேலியர்கள் தெரிவித்ததைச் சுட்டிக்காட்டி, இஸ்ரேலிய நாடாளுமன்றத்தின் முன்னாள் அங்கத்தவரும் அத்திலாந்திக் ஆணையத்தின் உறுப்பினருமான க்சேனியா ஸ்வெற்லோவா (Ksenia Svetlova), இஸ்ரேலிய மக்களில் அதிகமானோர் நெத்தன்யாகுவின் கொள்கைகளை ஏற்றுக்கொள்கிறார்கள் என்று தெரிவித்திருந்தார்.



அதே நேரம் மறுபுறத்தில், இஸ்ரேல்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## உரிமைகளும் ... தொடர்ச்சி ...

மத்தியிலேயே கொண்டு நடத்துவதாக கம்பனிகள் தெரிவிக்கின்றன.மேலும் வேதன முறையை மாற்றியமைக்க வேண்டுமெனவும் வருமான பங்கீட்டு முறையை கொண்டு வருமாறும் தொழிற்சங்கங்களிடம் கோரிக்கை விடுத்தபோதும் அவர்கள் அதுகுறித்து அக் கறை செலுத்தவில்லை என்றும் கம்பனிகள் தொழிற்சங்கங்களின்மீது குற்றம் சுமத்தி இருந் தன. இந்நிலையில் வெளியார் உற்பத்தி முறைக்கு கம்பனியினர் அழுத்தம் கொடுத்து வருவதனை அவதானிக்க முடிகின்றது.

பெருந்தோட்டங்களில் இப்போது விரை வாக விஸ்தரிக்கப்படும் கட்டமைப்பு மாற்றம் என்பது இருக்கின்ற தேயிலைச் செடிகளை தொழி லாளர்களே பராமரித்து , அதன் அறுவடையை



அதாவது தேயிலையில் இருந்து பறிக்கப்படும் கொழுந்தினை கம்பனிகளுக்கு வழங்கி தமது வாழ்வாதாரத்தை பராமரித்துக் கொள்ளும் நடவடிக்கையாகும். இந்த ஏற்பாடுகள் என்பது தோட்டங்களில் நிரந்தரமாக பதிவு செய்து கொண்டு தோட்ட முகாமைத்துவம் வழங் கும் வேலைகளை அதாவது அவர்களால் கட் டளையிடப்பட்ட வேலைகளை மட்டும் நிர்ணயிக்கப்பட்ட வேதனத்திற்காக மேற் கொள்ளப்படும் வேலைகளில் இருந்து விடு பெறுகின்ற செயன்முறையாகும் என்று பேரா சிரியர் ஏ.எஸ்.சந்திரபோஷ் குறிப்பிடுகின்றார்.

### விசேட ஜனாதிபதி செயலணி

பெருந்தோட்ட மக்கள் பொருளாதார நெருக் கடியில் அல்லல்படும் நிலையில் பல்வேறு துறைகளின் பின்னடைவிலும் இது தாக்கம் செலுத்துவதாக உள்ளது. இதனிடையே பெருந் தோட்ட மக்களை சிறுதோட்ட உரிமையாளர்களாக மாற்றியமைப்பதன் மூலம் அவர்களின் ஒளிமயமான எதிர்காலத்திற்கு வழிசமைக்க முடியும் என்ற கருத்து வெளிப்பாடுகளும் இருந்து வருகின்றன.

எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசா பெருந்தோட்ட மக்களை சிறுதோட்ட உரிமை யாளர்களாக்க வேண்டியதன் முக்கியத்துவம் தொடர்பில் தொடர்ச்சியாகவே வலியுறுத்தி வருகின்றார். இந்நிலையில் மலையக மற்றும் தென்பகுதி பெருந்தோட்ட சமூகங்களின் உரிமை களை பாதுகாப்பதற்கான உறுதி மொழியை வழங்கி பெருந்தோட்ட மக்களை பிரதிநிதித்து வப்படுத்தும் அரசியல் கட்சிகள் மற்றும் பிரதிநிதிகளுடன் ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

இதன்போது சஜித் பெருந்தோட்ட மக்களின் நலன் தொடர்பில் பல்வேறு வாக் குறுதிகளையும் வழங்கியுள்ளார். ஐக்கிய மக் கள் கூட்டணி அரசாங்கத்தில் ஸ்தாபிக்கப் படும் விசேட ஜனாதிபதி செயலணியின் ஊடாக பெருந்தோட்ட மக்களின் பொருளா தார,சமூக அபிவிருத்தி மற்றும் அரசியல் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு வழங்கப் படுவதோடு,பெருந்தோட்ட மக்களுக்கு காணி யுரிமை மாத்திரமின்றி பயிர்ச்செய்கை, வீட்டு உறுதி, சிறுதோட்ட உரிமை என்பவற்றை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசா இதன்போது உறுதியளித்துள்ளார்.

இதேவேளை 2019 ம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலின்போது தமிழ் முற்போக்கு கூட்டணி 'கொள்கை விளக்கமும் கோரிக்கைகளும்' என்ற தலைப்பில் வெளியிட்ட பிரசுரத்தில் மலையக மக்களின் நலன் கருதி பல்வேறு விடயங்களை வலியுறுத்தி இருந்தது. இதில் நாட்டில் தற்போது இயங்கிவரும் பெருந்தோட்ட நிர்வாகக் கட்டமைப்பினை இதே நாட்டில் இயங்கிவரும் சிறுதோட்ட உடைமைக் கட்டமைப்புக்கு மீளமைப்பு செய்ய வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்பட்டிருந்தது.

இதன் மூலம் தொழில்துறை பாதுகாப்பு, தொழில் பாதுகாப்பு, சிறந்த வேலைச் சூழல், அதிக உற்பத்தித்திறன், சுயதொழில் அம்சங்களைக் கொண்டு பெருந் தோட்ட சமூகத்தின் வருமானத்தை மேம் படுத்தும் நோக்கங்களை அடைதல். மற்றும் இதன் மூலம் ஒரு தொழிலாளியாக அல்லாமல் 'தமிழ் விவசாயியாக' 1500/- ரூபா அளவில் நாளொன்றுக்கான வருமானமாக கூட்டு ஒப்பந்தத்திற்கு வெளியிலே பெறக்கூடிய தான ஏற்பாடுகளை மேற்கொள்ளல் போன்ற விடயங்களும் பிரசுரத்தில் வலியுறுத்தப் பட்டிருந்தன.

### மைத்திரியின் வாக்குறுதி

இதேவேளை தோட்டத் தொழிலாளர்களை தொடர்ந்தும் தொழிலாளர்களாகவே வைத் திருக்க முடியாது. தோட்ட ஒப்பந்தங்களுக் கமைய காணித்துண்டொன்றை வழங்கி சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்கு நிகராக அம்மக்களை மேம்படுத்துவது தொடர் பில் ஆராயப்பட்டு வருவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். இதனி டையே பெருந்தோட்ட மக்களுக்கு காணி யுறுதியை பெற்றுக் கொடுக்கும் திட்டத்திற்கு ஜனாதிபதி 4000 மில்லியன் ரூபா நிதியினை ஒதுக்கியுள்ளமை தெரிந்ததேயாகும். ஜனாதிபதி யின் இந்நடவடிக்கைக்கு அமைச்சர் ஜீவன் தொண்டமான் தனது நன்றியினையும் தெரிவித்திருந்தார்.

மலையக மக்களை லயன் வாழ்க்கையில் இருந்து மீட்டெடுத்து காணியுரிமையுடன் கூடிய சகல வசதிகளும் கொண்ட நவீனமயமான கிராமியச் சூழலில், தனிவீடுகளை அமைத்துக் கொடுத்து வாழவைக்கப் போவதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் தெரி வித்திருந்தார். எனினும் எதிர்பார்த்த சாதக விளைவுகள் கிடைக்காது போனமை யாவரும் அறிந்ததாகும். எவ்வாறெனினும் பெருந்தோட் டத் தேயிலைத் தொழிற்றுறை மற்றும் தொழி லாளர்களின் எதிர்காலம் என்பன கேள்விக்குறி யாகிவரும் நிலையில் தொழிலாளர்களை அதி லிருந்தும் மீட்டெடுத்து சிறுதோட்ட உடைமை யாளர்களாக வாழச்செய்வதற்கு வித்திடுதல் வேண்டும். இது அவர்களின் ஒளிமயமான எதிர்காலத்திற்கு உந்துசக்தியாகும் என்று கருதப் படுகின்றது.

• • •

## கச்சதீவு... தொடர்ச்சி ...

இலங்கைக்கு 1974 ஆம் ஆண்டு கொடுத்ததாக இந்திய பிரதமர் நரேந்திர மோடி குற்றம் சுமத்தியுள் ளார்.

இந்தியாவின் 545 ஆசனங்களைக் கொண்ட நாடாளுமன்றத் தில் தமிழகம் 39 ஆசனங்களைக் கொண்டுள்ளது. எனவே தமிழகத் தில் ஆசனங்களைப் பெறும் நோக்குடன் பராதிய ஜனதாக் கட்சி செயற்பட்டுவருவதாக தெரிவிக் கப்படுகின்றது. எதிர்வரும் 19 ஆம் நாள் ஆரம்பமாகும் தேர்தல் 7 சுற்றுக்களாக நடை பெற்று எதிர் வரும் ஜூன் மாதம் 1 ஆம் நாள் முடி வடையும்.

## சீனாவை... தொடர்ச்சி ...

விகித மக்கள் சீனாவுக்கும் ஆதரவுகளைத் தெரி வித்திருந்தனர்.

சீனா இந்த பிரதேசத்தில் தனது பொரு ளாதார நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி வருவதும்அதற்கானகாரணம். எனினும்பலர்அது தொடர்பில் அச்சம் கொண்டுள்ளனர் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இதனை சீனாவுக்கான ஆதரவு என எடுக்காது தற்போதைய பாலஸ்தீன - இஸ்ரேல் போரில் அமெரிக்காவுக்கு எதிராக தென்கிழக்கு ஆசிய மக்கள் எடுத்திருக்கும் நிலைப்பாடாக எடுக்கலாம் என ஆய்வாளர் இயன் சொங் தெரிவித்துள்ளார்.

## பிரான்ஸ் ... தொடர்ச்சி ...

யாடலின் போதே அவர் இதனை தெரி வித்துள்ளார். கடந்த ஒக்டோபர் 2022 ஆம் ஆண்டுக்கு பின்னர் இரு தரப்பினருக்கும் இடையில் இடம்பெற்ற முதலாவது உரையா டல் இதுவாகும் இந்த உரையாடல் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக இடம்பெற்றுள்ளது.

உக்ரைனுடன் சமாதான பேச்சுக்களுக்கு ரஸ்யா தயாராகவே இருப்பதாகவும், ஆனால் ரஸ்யாவைவிடுத்துசுவிற்சலாந்தில்இடம்பெறும் பேச்சுக்களை தாம் நிராகரிப்பதாகவும் ரஸ்யா வின் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்ததாக ரஸ்ய தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிரான்ஸ் உக்ரைனுக்கு தொடர்ந்து உதவிகளை வழங்கும், அது ஐரோப்பிய ஒன்றியத்தின் பாதுகாப்புக்கு முக்கியமானது என பிரான்ஸ் தெரிவித்ததாக பிரான்ஸ் தகவல்கள் தெரிவித்துள்ளன. எனினும் போர் நிறுத்தம் மற்றும் அமைதிப் பேச்சுக்கள் தொடர்பில் பிரான்ஸ் பாதுகாப்பு அமைச்சர் பேசியதாக வெளிவந்த தகவல்களை பிரான்ஸ் மறுத்துள்ளது.

உக்ரைனுக்கு தனது படையினரை அனுப்புவது தொடர்பில் பிரான்ஸின் அதிபர் இமானுவேல் மக்ரோன் தொடர்ந்து பேசி வரு கின்றார். அதேசமயம் பிரித்தானியா படையை ஒருபோதும் அனுப்பாது என பிரித்தானியாவின் வெளிவிவகார அமைச்சர் டேவிட் கமரோன் தெரிவித்துள்ளார்.

## தமிழகத்தில்... தொடர்ச்சி ...

ஆகியோர் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் உடல்நலக்குறைவால் அண்மையில்சாந்தன்உயிரிழந்தார்.இதேவேளை எஞ்சிய மூவரும் தாயகம் திரும்ப விருப்பம் தெரிவித்திருந்தநிலையில் அவர்களை இலங் கைக்கு அனுப்ப இந்திய மத்திய அரசு அனுமதியளித்த நிலையில் அவர்கள் நாடு திரும்பியுள்ளனர்.

விமான நிலையத்தில் சுமார் ஐந்து மணி நேரமாக இடம்பெற்ற விசாரணையின் பின்னர் மாலை 5.00 மணியளவில் மூவரும் வெளியே செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

## இஸ்ரேலின்... தொடர்ச்சி ...

ஸ்பெயின் தெரிவித்துள்ளது. ஐக்கிய நாடுகள் சபையில் நிரந்தர உறுப்புரிமை வேண்டும் என்ற கோரிக்கையை பாலஸ்தீனமும் விடுத்துள்ளது.

இஸ்ரேல் மேற்கொண்டுவரும் தொடர் தாக்குதல்களில் இதுவரையில் அங்கு 33,000 மக்கள் கொல்லப்பட்டதுடன், 75,000 இற்கு மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர். கொல் லப்பட்டவர்களில் பெரும்பாம்மையான வர்கள் சிறுவர்கள்.

### இஸ்லாமிய ... தொடர்ச்சி ...

பரவலாக்கல் செய்யும் செயற்பாடுகளை பிள்ளையான் போன்றவர்களை வைத்து அரசுகள் செய்கின்றது. அதற்காகவே பிள்ளையான் போன்றவர்கள் செல்லப்பிள்ளைகளாக வளர்த்துவிடப்படுகின்றார்கள்.

இதனை கிழக்கில் உள்ள தமிழர்கள் புரிந்துகொள்வது மிக முக்கியமாகும். கிழக்கில் முஸ்லிம்களுக்கு எதிரான கொள்கைகளை விதைத்து தாங்கள் முன்னெடுத்த குற்றச் செயல்களை மறக்கச்செய்யலாம் என்று முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளை தமிழர்கள் உணர்ந்துகொள்ளும்போதே இவ்வாறான வேடதாரிகளின் செயற்பாடுகள் எதிர்காலத்தில் இல்லாமல்போகும்.

தற்போது தேர்தலுக்குரிய செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதனால் எதிர்காலத்தில் இனமுரண்பாடுகளை ஏற்படுத்தும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் நிலை காணப்படுகின்றது. அதன் ஆரம்பமே ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் தொடர்பான புத்தக வெளியீடாகவுள்ளது.

ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் தொடர்பில் மகிந்த குடும்பத்தின் மீதும் பிள்ளையான் மீதும் இலங்கை புலனாய்வுத்துறை மீதும் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் குறித்து இதுவரையில் எந்தவிதமுறையான விசாரணைகளும் முன்வைக்கப்படவில்லை.

இந்த தாக்குதலுடன் தொடர்புபட்டுள்ளவர்கள் என்ற குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளவர்கள் அனைவரும் இன்று உயர் பதவிகளில் உள்ளனர். அவ்வாறான நிலையில் எவ்வாறு அவர்களுக்கு எதிரான விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என்ற சந்தேகம் உள்ளது.



இந்த ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் அசாத் மௌலானா வெளியிட்டுள்ள தகவல்கள் பொய்யா இருப்பதற்கான சாத்தியம் இல்லையென அண்மையில் கருணா குறிப்பிட்டிருந்தார். அவர் அவ்வாறு குறிப்பிட்டதை யாரும் வெறும் கருத்து என்று மறுத்துச்செல்லமுடியாத நிலையுள்ளது. ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான வழக்கு விசாரணைகளுக்கான அழுத்தங்கள் என்பது தற்போது இலங்கையிலும் சர்வதேச ரீதிலும் இல்லாத நிலையே காணப்படுகின்றது. மல்கம் ரஞ்சித் ஆண்டகையும் மௌனிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறான நிலையில் மீண்டும் கிழக்கில் இனமுறுகல்களை ஏற்படுத்துவதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றதா என்ற சந்தேகம் ஏற்பட்டிருக்கின்ற நிலையில் கிழக்கினைப்பொறுத்த வரையில் பிள்ளையான் போன்றவர்கள் வெளியிடும், வெளிப்படுத்தும் விடயங்கள் தொடர்பில் தமிழ் பேசும் மக்கள் எதிர்காலத்தில் அவதானமாக செயற்பட வேண்டியது அவசியமாகும். கிழக்கில் தமிழ் பேசும் மக்கள் ஒற்றுமையுடன் வாழும்போது வட கிழக்கு இணைந்த தாயகத்தில் தமிழ் பேசும் மக்கள் ஒன்றுபட்டுவாழமுடியும்.

• • •

### தமிழர்களின்... தொடர்ச்சி ...

வழக்கு தாக்கல் செய்து மக்களை வெளியேற்ற திட்டமிட்டார்கள் என்றார்கள்.

இப்படியான காவி உடை தரித்தவர்கள் பெரும் பான்மை சமூகத்துக்காக குரல் கொடுக்க முன்வருகின்ற போது சிறுபான்மை சமூகத்தை காப்பதற்கு யாரும் முன்வருவதில்லை. திருகோணமலை மாவட்டத்தில் தென்னமரவாடி தொடக்கம் அரிசி மலை மற்றும் வெருகல் வரையான பல இடங்களில் தொல்பொருள் எனும் போர்வையில் மதஸ்தலங்கள் கபளீகரம் செய்யப்படுகிறது இவ்வாறான நிலையை தட்டிக்கேட்க திராணியற்றவர்களாக நாம் இருக்கிறோம்.

இந்த நாட்டில் நிம்மதியாக சுதந்திரமாக வாழ வேண்டும் என்பதையே விரும்புகிறோம் சட்டத்தை யாரும் கையில் எடுக்க முடியாது என்ற நிலை உள்ளது .ஆனால் பாமர மக்களை இலகுவாக கைது செய்து சிறையில் அடைக்கின்றனர் பல சம்பவங்கள் ஆர்ப்பாட்டங்கள் இதற்கு உதாரணங்களாகும். ஞானசார தேரர் எட்டு வருடங்களின் பின் இஸ்லாமிய மதத்தை இழிவுபடுத்தியதற்காக கடூழிய சிறைத் தண்டனை விதித்து கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்தது இது போன்று சிறுபான்மை மக்களின் காணிகள் பல தொல்பொருள் என்ற போர்வையில் பறிக்கப்பட்டுள்ளது இதனை விடுவிக்க வேண்டும் நீதி நியாயம் கிடைக்க வேண்டும் .எந்தவித அபிவிருத்தியாயினும் அம் மக்களை வெளியேற்றாமல் அபிவிருத்தி செய்ய வேண்டும் திருகோணமலை துறைமுகம் அபிவிருத்தி என்றாலும் பாமர மக்கள் பாதிக்கப்படக் கூடாது இதற்கான சரியான கொள்கை ரீதியான திட்டங்களை வகுத்து மக்களை பாதுகாக்க வேண்டும்.

ஜனநாயக நாட்டில் நீதிச் சுதந்திரம் சுதந்திரமாக செயற்பட வேண்டும் மக்களுடைய சுதந்திரம் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் அப்பாவி மக்களின் காணிகள் அவர்களுக்கு சரியான உரித்து படிவங்களை வழங்கி செயற்பட வேண்டும். காணிகள் கபளீகரம் செய்யப்படாத வண்ணம் வாழ வழிவகுக்க வேண்டும் என்பதை வடகிழக்கு சிறுபான்மை சமூகம் எதிர்பார்க்கின்றனர்.

### மக்கள் வளங் ... தொடர்ச்சி ...

இதன் போது குறித்த அமைப்பின் செயற்குழு உறுப்பினர் இவ்வாறு கருத்து தெரிவித்தார்.எமது வளங்களை இந்தியாவுக்கு தாரை வார்க்கும் ரணில் ராஜபக்ச அரசாங்கம் இதனை ஏற்க முடியாது மக்களின் சொத்துக்களை வளங்களை சூறையாட முனைகின்றனர் இதனை நிறுத்த வேண்டும்.

நாட்டின் முக்கிய வளங்களான துறை முகங்கள் விமான நிலையம் போன்றன தாரை வார்க்கப்படுகிறது திருகோணமலையில் முக்கிய கரையோர பிரதேசம் தொடக்கம் கப்பல் துறை வரையான பகுதி அபகரிக்கப்படுகிறது இதனை நிறுத்தி மக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க வேண்டும். இலங்கை நாடு சர்வதேச நாணய நிதியத்தின் பிடியில் சிக்கி தவிக்கிறது இதற்கு எதிராக போராடியவர்களை கைது செய்துள்ளனர் மக்களுக்கு எதிரான ஜனநாயகத்துக்கு எதிரான சட்டங்களை கொண்டு வந்து மக்களை அடக்கி ஒடுக்க முனைகின்றனர் என்றார்.

### இந்தியாவில் தக ... தொடர்ச்சி ...

செயல்திட்டங்களையும் நடத்துவதற்கு மெற்றா நிறுவனம் திட்டமிட்டுள்ளது. அதிகளவிலான இந்தியர்கள் சமூகவலைத்தளங்களை பயன்படுத்துவதால் தற்போது சிங்கப்பூரில் இயங்கி வரும் தகவல் மையத்திற்கு அனுப்பப்படும் தகவல்களின் செலவுகளை குறைப்பதற்கு இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இந்தியாவில் முகநூலை 314 மில்லியன் மக்களும், வற்ஸ்அப்பை350மில்லியன்மக்களும், இன்ஸ்ரகிராமை 450 மில்லியன் மக்களும் பயன்படுத்தி வருகின்றனர். அண்மையில் முகேஸ் அம்பானியின் மகனின் திருமணத்திற்கு வந்திருந்த மெற்றா நிறுவனத்தின் தலைவர் மார்க் சுகெர்பேர்க் இந்த உடன்படிக்கையை மேற்கொண்டிருந்தார்.

செயற்கை நுண்ணறிவு தொடர்பில் இந்தியா கடுமையான கட்டுப்பாடுகளை கொண்டுவந்துள்ள நிலையில் மெற்றா நிறுவனத்தின் இந்த திட்டம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. கூகுள் நிறுவனமும் மும்பாயில் தகவல் மையம் ஒன்றை அமைக்கவுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

### உலக நாடக... தொடர்ச்சி ...

அதுபோல, களரி அரங்கக்கலை நிதியத்தின் தயாரிப்பிலே திருகோணமலையிலுள்ள உவர் மலை தேசிய பாடசாலையில் உலக நாடக தினத்தை முன்னிட்டு மஹாகவி காளிதாசர் ஆற்றுகையானது மேடையேறியது.

மஹாகவி காளிதாசர் நாடகத்தில் இலங்கையின் கிழக்கு, வடக்கு, மலையகம் எனப் பல பிரதேசங்களைச் சேர்ந்த கலைஞர் கள் கலந்து சிறப்பித்தனர்.



## வடபகுதி மீன... தொடர்ச்சி ...

அரசின் நிறைவேற்று அதிகாரத்தில் உச்ச நீதி மன்றம் தலையிடுவதை மட்டுப்படுத்துவது தொடர்பாக, நெத்தன்யாகு அரசு நீதித்துறையில் கொண்டுவந்த மாற்றங்களுக்கு எதிராக அந்த நாட்டின் உச்சநீதிமன்றம், எதிரான தீர்ப்பை வெளியிட்டிருந்தது.

இஸ்ரேல்அரசுநீதித்துறையில்கொண்டுவர எண்ணியிருந்த மாற்றங்களுக்கு எதிராக இஸ்ரேலில் 2023ம் ஆண்டில் பாரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. 'தனது தனிப்பட்ட காரணங்களுக்காகவே குறிப்பிட்ட சட்டத்தை நெத்தன்யாகு கொண்டுவருகிறார்' என்ற காரணத்தைக் காட்டி, நெத்தன்யாகுவைப் பதவியிலில் இருந்து அகற்றுவதைக் கடினமாக்கும் ஒரு சட்டத்தை அமுலாக்குவதை உச்சநீதிமன்றம் பின்போட்டிருந்தது.

**இந்த முன்னெடுப்புகளுக்கு நெத்தன்யாகுவின் பதில் என்ன?**

பதவி விலகலுக்கான கோரிக்கையை நெத்தன்யாகு முற்றாக நிராகரித்திருக்கிறார்.

குடலிறக்கம் *(Hernia)* தொடர்பான ஒரு அறுவைச்சிகிச்சையை கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு நெத்தன்யாகு மேற்கொண்டிருக்கும் பின்புலத்தில், அவர் கடமைக்குத் திரும்பும் வரை, நீதி அமைச்சரான யாறிவ் லெவின் *(Yariv Levin)* பிரதமராகச் செயலாற்றுவார் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

"பணயக்கைதிகளைவிடுவிப்பதற்குபோதியளவு நடவடிக்கையைத் தான் எடுக்கவில்லை என்று என்று சொல்பவர்களின் கூற்று தவறானது" என்று பேசிய நெத்தன் யாகு, "பேச்சுவார்த்தையில் இஸ்ரேல் தனது நிலைப்பாட்டைத் தளர்த்தியிருந்த போதிலும், ஹமாஸ் தனது நிலைப்பாட்டைக் கடுமையாக் கியிருக்கிறது" என்று அறுவைச் சிகிச்சைக்கு முன்னர் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்திருந்தார்.

"தேர்தலில் நெத்தன்யாகு தோல்வியைத் தழுவுவார்" என்று கருத்துக்கணிப்புகள் வெளிப்படுத்தும் சூழலில், தேர்தலை முன்கூட்டியே நடத்துவதற்கு நெத்தன்யாகு மறுத்துவருகிறார். "தற்போதைய சூழலில் தேர்தல்கள் எம்மிடையே பிளவுகளை ஏற்படுத்தக்கூடியன. தற்போதைக்கு எமக்கு

அவசியமானது ஒற்றுமையே" என்று பெப்பரவரி மாத்தில் நடைபெற்ற ஒரு பத்திரிகையாளர் சந்திப்பில் நெத்தன்யாகு குறிப்பிட்டிருந்தார்.

காஸா மீதான போர் முன்னெடுக்கப்பட்ட பின்னர், 'நெத்தன்யாகு தொடர்ந்தும் பதவியில் நிலைக்க வேண்டும்' என்று வெறும் 15 வீதமான இஸ்ரேலியர்கள் மாத்திரம் விரும்புவதாக, இஸ்ரேல் சனநாயக நிறுவனம் முன்னெடுத்த ஆய்வின் முடிவுகள் கோடிட்டுக்காட்டின. முன்னாள் பாதுகாப்பு அமைச்சரும், தற்போதைய போர்க்கால அமைச்சரவையின் அங்கத்தவருமான பெனி காண்ட்ஸ் *(Benny Gantz)* பிரதம மந்திரியாக வருவதை 23 வீதமான இஸ்ரேலியர்கள் விரும்பு வதாக அந்த ஆய்வு மேலும் தெரிவித்தது.

தேர்தல்கள் தற்போது நடத்தப்பட்டால், காண்ட்ஸின் தேசிய ஒற்றுமைக் கட்சி 39 ஆசனங்களை எடுக்கும் என்றும் நெத்தன்யாகுவின் லிக்குட் கட்சி 17 ஆசனங்களை மட்டுமே எடுக்கும் என்றும் இஸ்ரேலின் 13வது அலைவரிசை மேற்கொண்ட கருத்துக்கணிப்புகளின் முடிவுகள் வெளிப்படுத்தியிருக்கின்றன.

**நன்றி: அல்ஜஸீரா**

## ஈரான் சந்தித்த... தொடர்ச்சி ...

குழுவினர் சென்ற சமயம் இஸ்ரேல் தாக்குதலை நடத்தியுள்ளது. ஈரானின் குழுவினர் இஸ்ரேல் மீதான ஹிஸ்புல்லாக்களின் தாக்குதலை ஒருங்கிணைக்கும் திட்டங்களை வகுப்பதற்கு சென்றார்களா என்ற கேள்விகள் எழுந்துள்ளன. இஸ்ரேல் மீது தாக்குதலை மேற்கொள்வதற்கான அனுமதியை ஈரான் வழங்கியதா என்ற சந்தேகங்களும் எழுந்துள்ளன.

இருந்தபோதும் இந்த தாக்குதல் என்பது அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளை மத்திய கிழக்கில் ஒரு பிராந்திய போருக்குள் இழுக்கும் இஸ்ரேலின் தந்திரமாகும் என கூறப்படுகின்றது. இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெத்தனியாகுவிற்கு எதிராக உள்நாட்டிலும், அனைத்துலகத்திலும் எதிர்ப்புக்கள் வலுப்பெற்று வருகையில் இஸ்ரேல் அதனை மடைமாற்றும் முயற்சியாக இந்த தாக்குதலை நிகழ்த்தியுள்ளது.

ஈரானுக்குளும் இஸ்ரேல் தாக்குதல்களை மேற்கொண்டுவரும் அதே சமயம் தற்போது அது தனது உத்திகளை மாற்றி ஈரானிய உயர் அதிகாரிகளை ஈரானுக்கு வெளியில் வைத்து கொல்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

கடந்த வருடம் ஈரானில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 100 இற்கு மேற்பட்டவர்கள் கொல்லப்பட்ட நிலையில், ஈரான் பாகிஸ்தான் மற்றும் ஈராக்கில் உள்ள இஸ்ரேல் ஆதரவு ஆயுதக்குழுக்கள் மீது ஏவுகணைத்தாக்குதலை மேற்கொண்டிருந்தது.

சில வருடங்களுக்கு முன்னர் ஈரானின் ஆணுவாயுத விஞ்ஞானியை ஈரானின் தலைநகரில் இருந்து 50 கி.மீ தொலைவில் வைத்து இஸ்ரேல் படுகொலை செய்திருந்தது. ஆனால் தற்போது நிலமை வேறுபட்டது. ஆயுதபலத்தால் மிகப் பெரும் முன்னேற்றத்தை கண்டுள்ள ஈரானின் படை பலத்தை அழிப்பது தான் இஸஜரேலின் உத்தியாக உள்ளது.

அதாவது உக்ரைனின் மூலம் ரஸ்யாவின் பலத்தை சிதைப்பது, இஸ்ரேலின் மூலம் ஈரானின் பலத்தை சிதைப்பது, தாய்வானின் மூலம் சீனாவை முடக்குவது தான் தற்போதைய போரின் வியூகங்களாக உள்ளன. ஆனால் இந்த வியூகங்கள் முன்னரை போன்று மேற்குலகத்திற்கு இலகுவானதல்ல என்பதை ஈரானின் பதில் தாக்குதல் விரைவில் உணர்த்தலாம்.

• • •

## கச்சதீவை... தொடர்ச்சி ...

உள்ளடக்கியதாக எல்லையை வகுக்கும் போது தமது மீன்பிடிப்பதற்கான பகுதி ஒடுங்கிப்போய் விட்டது என்பதுதான் அவர்களுடைய வாதம். ஆனால், அவர்கள் தமது ஒடுங்கிய பரப்புக்குள் நின்று மீன்பிடிப்பதில்லை. பிடிக்கப்பட்ட இந்திய மீன்பிடிப் படகுகளில் 99 வீதத்துக்கும் அதிகமானவை இலங்கையின் கடல் எல்லைக்குள் வைத்துத்தான் பிடிபட்டுள்ளன. அவர்கள் யாழ்ப்பாண வாவிக்குள் வருகின்றார்கள். முல்லைத்தீவு, காங்கேசன்துறை, திருகோணமலை போன்ற பகுதிகளில் கரையிலிருந்து கண்ணுக்குத் தெரியக் கூடியளவு துாரத்துக்கு அவர்கள் வருகின்றார்கள். அவையெல்லாம் எல்லைகள் தெரியாமல் வந்த விடயங்களல்ல.

அரசுகள் கடலில் எல்லைகளைப் போடலாம். ஆனால், மீன்களும் மீனவர்களும் அந்த எல்லைகளை மதிப்பதில்லை. மீன்கள் செல்லும் திசையில்தான் மீனவர்கள் செல்வார்கள். தடுமாற்றங்கள் இருக்கலாம். ஆனால், இப்போது ஜீ.பீ.எஸ். போன்ற நவீன கருவிகள் வந்துவிட்ட நிலையில் படகொன்றைச் செலுத்திச் செல்பவருக்கு தெரியும் தான் இப்போது நிற்கும் இடம் எது என்பது.

ஆனால், இந்திய மீனவர்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்குள்ள பிரச்சினை என்னவென்றால், கச்சதீவில்தாம் வந்துதங்கி நிற்பதற்கும், அங்கு மீன்களைப் பதப்படுத்துவதற்கும், வலைகளைக் காயவிடுவதற்குமான தடை.

போர் தீவிரமடைந்த நிலையில், இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடைப்பட்ட கடற்பரப்பில் போராளிகள் பெருமளவுக்கு சென்றுவருகின்றார்கள். அகதிகள் செல்கின்றார்கள். ஆயுதங்களைக் கொண்டு செல்கின்றார்கள் என்ற பெயரால் கச்சதீவு முழுமையாக இலங்கைப் படையினரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. அதன் காரணமாகத்தான் இந்திய மீனவர்கள் அங்கு செல்வது தடை செய்யப்பட்டது. இதுதான் உண்மையில் நடந்தது.

ஆனால், போராளிகள் ஒரு போதும் கச்ச zதீவை மையப்படுத்தியோ, நெடுந்தீவை மையப்படுத்தியோ தமது ஆயுதங்களைக் கொண்டு செல்லவில்லை. ஆனபடியால், அது ஒரு காரணமல்ல. காரணம் என்னவென்றால், அதிகளவுக்கு அகதிகள் சென்றார்கள் என்பது, கள்ளக்கடத்தலுக்கு இது பயன்படுத்தப்பட்டது என்பதும்தான்.

மீன்பிடியைப் பொறுத்தவரையில் வட பகுதி மீனவர்கள் அங்கு செல்வதும், இராமநாதபுரம், தங்கச்சிமடம் மீனவர்கள் இங்கு வருவதும் பாரம்பரியமாக இருந்துவரும் ஒன்றுதான். அதில் எந்தப் பிரச்சினையும் இருக்கவில்லை. ஆனால், இந்தியாவில் இழுவைப் படகு எப்போது அறிமுகமாகியதோ அப்போதுதான் அது பிரச்சினையாகியது. இதற்குக் காரணமாக இருந்தவர்கள் இந்தியாவின் பெரு முதலாளிகளும் இந்தியாவின் அரசியல்வாதிகளும்தான். இன்று தமிழ்நாட்டின் மீன்பிடி அவர்களுடைய கட்டுப்பாட்டில்தான் இருக்கின்றது. பெரும் முதலாளிகளாக அவர்கள் இருக்கின்றார்கள். அவர்கள்தான் தமது நலன்கள் பாதிக்கப்படுவதாகப் போராடுகின்றார்கள்.

படகுகளில் வருபவர்கள் ஏழை மீனவர்கள் நாளாளந்தம் கூலிக்கு வேலைசெய்பவர்கள். அவர்களுக்குப் பிரச்சினையில்லை. ஆனால், அவர்கள் நிர்ப்பந்திக்கப்படுகின்றார்கள். இலங்கை கடலுக்குச் சென்று எல்லாவித சட்ட விரோத முறைகளையும் பின்பற்ற அவர்கள் கட்டாயப் படுத்தப்படுகின்றார்கள். இதனால், இலங்கையின் கரையோரம் வரையில் அவர்கள் வருகின்றார்கள். இதுதான் உண்மையான பிரச்சினை.

அதேவேளையில், இலங்கை அரசாங்கமும் வடபகுதி மீனவர்களை தமது மக்களாக, அவர்களுடைய பொருளாதாரம் வடபகுதி மக்களுடைய பொருளாதாரமாக மாற்றுவதற்காக அரசாங்கம் இதுவரையில் நேர்மையாகச் செயற்பட்டதில்லை. அதனால்தான் வட பகுதி மீனவர்கள் போராடுகின்றார்கள். போரினால், அனைத்தையும் இழந்த மீனவர்கள் இப்போதுதான் பூச்சியத்திலிருந்து ஆரம்பிக்கும் போது இந்திய இழுவைப் படகுகளின் சட்டவிரோதமான செயற்பாடுகளால், தமது வளங்களையும் வாழ்வாதாரங்களையும் அவர்கள் இழக்கின்றார்கள்.

பிரச்சினை கச்சதீவு அல்ல. அவர்கள் பயன்படுத்தும் மீன்பிடி முறைமைதான்.

• • •

இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு.
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை.